Annual Subscription Rs.100/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 35 இதழ் - 8 ஆகஸ்ட் - 2022

தனிப்பிரதி ரூ.10/-



ஜெபியுங்கள் !! திட்டமிடுங்கள் !! பங்கு பெறுங்கள் !!

**காங்கயம் கிறிஸ்துவின் சபையாரும்,**
**தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டமும்**
**இணைந்து நடத்தும்**

# இருபத்தைந்தாம் வேதாகம கருத்தரங்கம்

## 25th Annual Bible Lectureship

கருப்பொருள் : கர்த்தரையே சேவிப்போம்

THEME : We Will Serve the Lord

**நாள் : அக்டோபர் 4, 5 - 2022 ( செவ்வாய், புதன் )**
(அரசு விடுமுறை நாட்கள்)

**நேரம்**
வியாழன் : காலை 8:45 - மாலை 4:45 மணி
வெள்ளி : காலை 8:45 - மதியம் 1:00 மணி

**இடம்**
**கிறிஸ்துவின் சபை வளாகம்**
தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701. தமிழ்நாடு.

- வெளியூர்களிலிருந்து வருபவர்களுக்கு உணவும், தங்குமிடமும் இலவசம்.
- தங்குவதற்கு ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித்தனி இடம் உண்டு.

தொடர்புக்கு : 04257 - 230030 செல் : 98427 - 30382, 99655 - 30385, 98652 - 90572.

## ஆசானின் அறிவுரையிலே ...


1. ஆசிரியர் உரை 3
2. நற்செய்தியின் வல்லமை 11
3. பெண்கள் பகுதி 15
4. வாலிபர் பகுதி 18
5. சிறுவர் பகுதி 22
6. நம் நம்பிக்கை நலிவடைந்து.... 24
7. நற்செய்தியும் துர்ச்செய்தியும் 28
8. கிறிஸ்து என்னும் மார்க்கம் 31


- ஒன்றுக்கும் மேற்பட்ட இதழ்கள் வந்தால் எங்களுக்குத் தெரியப்படுத்தவும்.
- முகவரி மாற்றத்தைக் கண்டிப்பாக கடிதம் மூலம் தெரியப்படுத்தவும்.
- இந்த இதழ் மூலம் நீங்கள் அடையும் பயன்களை எங்களுக்கு எழுதவும்.
- அஞ்சல் வழியில் வேதாகமம் படிப்பவர்கள் உங்களது தொலை / அலைபேசி எண்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். தாமதத்தை தவிர்க்க இது உதவும்.

– ஆசிரியர்.

THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.
PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 36 August - 2022 Issue - 8

ஆசிரியர் உரை

## எஸ்தர் மகாராணியிடமிருந்து...

பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டுப் பரிசுத்த வேதாகமத்தில் இடம்பெற்றுள்ள அறுபத்தாறு நூல்கள் ஒவ்வொன்றுக்கும் தனிச்சிறப்பும், தனித்துவமும் உண்டு. ஆம், ஒவ்வொன்றும் அதினதின் தன்மையிலும், பொருளிலும், காலக்கிரமத்திலும், பின்னணித் தகவல்களிலும் வேறுபட்டு நிற்கும். ஆயினும், அவைகள் அனைத்திலுமிருந்து விலகி முற்றிலும் தனித்தன்மை கொண்டதாக ஒரு நூல் இருக்கிறதென்றால் அது எஸ்தர் சரித்திர நூல்தான். அதற்கான பிரதான காரணம், இந்நூலில் யெகோவா, தேவன், கர்த்தர், ஆண்டவர் என்று எந்த ஒரு வார்த்தையும் இடம் பெறவில்லை. இத்தனைக்கும் வழிநடத்தும் தேவனின் வல்ல கரம் இந்நூல் முழுவதும் நீண்டு இருப்பதை இதை வாசிக்கும்போது உணர முடியும். மெய் பக்தியில் ஊறித்திளைத்த **மொர்தெகாய்** என்ற மாமனிதனின் சமயோசிதத்தாலும், ஆட்சிக்கட்டிலையும், தன் இன்னுயிரையும் அலட்சியமாக எண்ணிச் செயல்பட்ட எஸ்தர் பேரரசியின் துணிவாலும் ஒட்டுமொத்தப் பேரழிவிலிருந்து யூத இனம் காப்பாற்றப்பட்டதை இந்நூல் விவரித்துச் சொல்லுகிறது.

ஒருவேளை இவ்விருவரின் கூட்டுச் செயல்பாடு இல்லாமல் போய், இயேசு ஆண்டவர் பிறப்பதற்கு ஓர் 500 ஆண்டுகளுக்கு முன் எபிரெய வம்சம் பூமியின மீதிருந்து துடைத்து எறியப்பட்டிருக்கு மானால், மனித இனத்தின் தலைவிதியே மாறிப்போயிருந்திருக்கும். மேசியாவாகிய இயேசு வந்திருக்கமாட்டார். இரட்சிப்பின் நற்செய்தி கிடைத்திருக்காது. சபையாகிய இராஜ்ஜியம் ஆரம்பிக்கப்பட்டி ருக்காது. உலகம் இழந்துபோன நிலையிலேயே தொடர்ந்திருக்கும்.

ஆசானின் ஆசாரப்படி நாம் பின்னணித் தகவல்களுக்காகக் கணிசமான நேரம் ஒதுக்குவோம். ஆனால், எஸ்தரின் சரித்திரம் உங்களில் அநேகருக்குப் பரிச்சயமான சம்பவமாக இருக்கிறபடியால், மேலோட்டமாக மாத்திரம் தெரிந்து கொள்வோம்.

எஸ்தர் நூலின் சம்பவங்கள், எஸ்றா நூலின் 6 ம் அதிகாரத்துக்கும், ஏழாம் அதிகாரத்துக்கும் இடைப்பட்ட காலத்துக்குப் பொருந்தி வருகிறதாயிருக்கிறது. இந்த இரண்டு அதிகாரங்களுக்கு இடையேயான கால இடைவெளி 70–80 ஆண்டுகள் இருக்கலாம். நெகேமியா அலங்கம் கட்டும் வேலையை வெற்றிகரமாகச் செய்து முடிப்பதற்கு எஸ்தரின் ஆதரவு ஏதாவது ஒரு வகையில் இருந்திருக்கலாம் என்று தெரிகிறது.

சரி, இம்மாதம் நம்முடைய பாடங்களுக்கு ஆதாரமாக இருக்கும் வேத பகுதி எஸ்தர் 4–ம் அதிகாரம். உலக சரித்திரம் கண்ட வில்லன்களில் மிகவும் கொடூர குணம் கொண்ட ஒரு வில்லனை 3–ம் அதிகாரத்தில் நாம் காண முடியும். அவன் பெயர் அம்மெதாத்தாவின் குமாரன் ஆமான். மனித வரலாற்றில் பல கட்டங்களில் ஆட்சியாளர்கள் அசலுக்கும், போலிக்கும் வேறுபாடு தெரியாதவர்களாகவே ஆட்சி பரிபாலனம் செய்துள்ளனர். 127 நாடுகளுக்கு மாமன்னனாக இருந்த அகாஸ்வேருவும் இதற்கு விதிவிலக்காக இருக்கவில்லை. ஆம், எந்த ஒரு நியாயமான காரணமும் இல்லாமல் இந்த ஆகாகியனாகிய ஆமானை பிரதம மந்திரி என்ற உச்ச நிலைக்கு உயர்த்தி வைத்தான். தகுதியும், தரமும் இந்த மனிதனிடத்தில் மருந்துக்கும் இல்லை. ஆனாலும், இவனை வணங்க வேண்டுமென்ற அரச கட்டளை இருந்தபடியால், மொர்தெகாய் தவிர அனைவரும் இவனை வணங்கி வந்தார்கள். இந்த மொர்தெகாய் **என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம். மேலே வானத்திலும், கீழே பூமியிலும் பூமியின் கீழ்த் தண்ணீரிலும் உண்டாயிருக்கிற வைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும், யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம்; நீ அவைகளை நமஸ்கரிக்கவும், சேவிக்கவும் வேண்டாம்** (யாத் 20:3–5) என்னும் ஆண்டவரின் கட்டளையை அறிந்திருந்தபடியால், அரச கட்டளையை அலட்சியம் செய்தான். ஆம், நான் உன்னை வணங்க மாட்டேன், ''ஏனெனில், **நான் யூதான்**'' என்று பகிரங்கமாக அறிவித்து விட்டான். இதினிமித்தம் மூர்க்கம் கொண்ட ஆமான் தன்னைக் கேவலப்படுத்தும் ஒற்றை மனிதனாகிய மொர்தெகாயை மாத்திரம் அழிப்பது தன் தகுதிக்குக் கேவலம் என்று எண்ணி ஒட்டுமொத்த யூத இனத்தையும் சங்கரிக்கச் சதித்திட்டம்

தீட்டினான்.அதிலேவெற்றியும் பெற்றான்.அந்த ஜனத்துக்கு **உன் விருப்பப்படி** செய்யலாம் என்ற உத்திரவும் கிடைத்துவிட்டது. ஆதார் மாதமான பன்னிரண்டாம் மாதம் பதின் மூன்றாந் தேதியாகிய ஒரே நாளிலே சகல யூதர்களும் நிர்மூலமாக்கப்பட வேண்டுமென்று கட்டளை சாம்ராஜ்யம் எங்கும் பறந்தது [3:13-15].

ராஜாவின் உத்திரவும், அவனுடைய கட்டளையும் போய்ச் சேர்ந்த ஒவ்வொரு நாட்டிலும் யூதருக்குள்ளே மகா துக்கமும், உபவாசமும், அழுகையும், புலம்பலும் உண்டாகி, அநேகர் இரட்டுடுத்திச் சாம்பலில் கிடந்தார்கள். [4:3]. பக்தியுள்ள யூதனாகிய மொர்தெகாய் ஒரு படி மேலே சென்று தன் வஸ்திரங்களைக் கிழித்து, சாம்பல் போட்டுக்கொண்டு, நகரத்தின் நடுவே புறப்பட்டு மகா சத்தமாய் அலறிக்கொண்டு அரமனை வாசல் முகப்பு மட்டும் வந்தான். காரியம் கைமீறிப்போனதை அறிந்து, அவசரமாய் ராஜாவினிடம் போய் மன்றாடும்படி எஸ்தருக்குச் சொல்லியனுப்பினான் [4:8]. ஆனால், எஸ்தர் செய்தி கொண்டு வந்த **ஆத்தாகிடம், அழைப்பிக்கப் படாமல் ராஜாவினிடத்தில் பிரவேசித்து ராஜா பொற்செங் கோலை நீட்டாவிட்டால் சாவு நிச்சயம்** என்று தன் இயலாமையைப் பதிலாக அனுப்பினாள் [4:11]. இதைக்கேட்டுக் கொதித்துப்போன மொர்தெகாய்,.... **நீ ராஜாவின் அரமனையிலிருக்கிறதினால், மற்ற யூதர் தப்பக் கூடாதிருக்க, நீ தப்புவாயென்று உன் மனதிலே நினைவு கொள்ளாதே. நீ இந்தக் காலத்தில் மவுனமாயிருந்தால், யூதருக்கு சகாயமும் இரட்சிப்பும் வேறொரு இடத்திலுருந்து எழும்பும், அப்பொழுது நீயும் உன் தகப்பன் குடும்பத்தாரும் அழிவீர்கள்; நீ இப்படிப்பட்ட காலத்துக்கு உதவியாயிருக்கும்படி உனக்கு ராஜமேன்மை கிடைத்திருக்கலாமே யாருக்குத் தெரியும்** என்று சொல்லச் சொன்னான் [4:13,14] தன்னை வளர்த்து ஆளாக்கி அழகுபார்த்து, உச்சாணிக்கொம்பில் உட்காருவதற்கு எல்லா வகையிலும் காரணமாயிருந்த தன் சிறிய தகப்பனிடமிருந்து வந்த இச்செய்தி அவளை ஓர் உலுக்கி உலுக்கி விட்டது.

சரி, பாழுங் கிணற்றில் எட்டிக் குதிப்பதைத் தவிர வேறு வழியில்லை என்பதைக் கனகச்சிதமாகப் புரிந்து கொண்ட மகாராணி எஸ்தர் மொர்தெகாய்க்கு இவ்விதம் செய்தி அனுப்பினாள். "நீ போய் சூசானில் இருக்கிற யூதரையெல்லாம் கூடிவரச் செய்து மூன்று நாள் அல்லும் பகலும் புசியாமலும், குடியாமலுமிருந்து **எனக்காக உபவாசம் பண்ணுங்கள்; நானும் என் தாதிமாரும் உபவாசம் பண்ணுவோம்; இவ்விதமாக சட்டத்தை மீறி ராஜாவினிடத்தில்**

**பிரவேசிப்பேன்; நான் செத்தாலும் சாகிறேன்** என்று சொல்லச் சொன்னாள் (எஸ்தர் 4:16). எஸ்தர் மகாராணியின் இத்தீர்மானம் அவளுடைய இது வரையிலான அனைத்துச் செயல்பாடுகளுக்கும் மகுடம் சூட்டுவதாக உள்ளது. இவ்வசனத்தில் அவள் அழகு மங்கி, பயபக்தி பளிச்சென மின்னுகிறது.

இப்பொழுது நூற்று இருபத்தேழு நாடுகளுக்கு மகாராணி என்ற உயரத்தைத் தாண்டி, இவளை உச்சாணிக் கொம்பிற்குத் தூக்கிப் போவதற்குக் காரணிகளாள இருந்த எஸ்தரின் பக்திப் பண்புகள் எவைகள் என்று பார்ப்போம்.

## I எஸ்தர் ஒரு ஜெப வீராங்கனையாக இருந்தாள்

தன் பயபக்தியைப் பளிச்சென மின்னப் பண்ணின எஸ்தர் மகாராணியிடமிருந்து நமக்குக் கிடைக்கும் முதல் பாடம், ஜெபத்தில் அவளுக்கிருந்த ஆழ்ந்த நம்பிக்கை பற்றியது.

ஒட்டுமொத்த நூலிலும் எஸ்தர் மகாராணிக்கும், ஜெபத்திற்கும் எந்தத் தொடர்பும் இல்லாத நிலையில், எப்படி அவளை ஒரு ஜெப வீராங்கனை என்று சொல்லலாம் என்று நீங்கள் கேட்கக்கூடும், நியாயம் தான். ஆனால், அவள் தலைக்கு மேல் கத்தி தொங்கின போது அவள் செயல்பட்ட வித்தைக் கொஞ்சம் பாருங்கள். "...சூசானில் இருக்கிற யூதரையெல்லாம் கூடிவரச் செய்து, மூன்று நாள் அல்லும், பகலும் புசியாமலும், குடியாமலுமிருந்து எனக்காக உபவாசம் பண்ணுங்கள்; நானும், தாதிமாரும் உபவாசம் பண்ணுவோம் (4:16) என்று செய்தி அனுப்பினாள். உபவாசம் தானே, ஜெபம் என்று இல்லையே என்று நீங்கள் மறுபடியும் சொல்லக்கூடும். இதுவும் நியாயம்தான். ஆயினும், எஸ்றா நூலின் இவ்வார்த்தைகளை கவனியுங்கள். **அப்படியே நாங்கள் உபவாசம் பண்ணி, எங்கள் தேவனிடத்திலே அதைத் தேடினோம்** எங்கள் விண்ணப்பத்தைக் கேட்டருளினார் என்று. (எஸ்றா 8:21-23) ஆம், பரிசுத்த எழுத்துக்களில் உபவாசமும், ஜெபமும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்தவை.உபவாசம் இல்லாதஜெபம் உண்டு. ஆனால், ஜெபம் இல்லாத உபவாசம் இல்லை. (யாத் 34:28 ; உபா 9:9).

எஸ்தர் எதற்காக உபவாசம் இருக்கும்படியாகக் கேட்டாளோ, அவளும் அவள் தாதிமார்களும் எதற்காக உபவாசம் இருந்தார்களோ, அந்தக் காரியம் நிறைவேறியிருக்கிறது. ஆம், எஸ்றாவும், அவனோடிருந்தவர்களும் அகாவா நதியண்டையில் உபவாச மிருந்து ஏறெடுத்த விண்ணப்பத்தைக் கேட்ட தேவன்,

சூசானின் யூதர்களும், அரண்மனைப் பெண்களும் உபவாசித்து ஏறெடுத்த விண்ணப்பத்தையும் கேட்டிருக்கிறார். ஆம், ராஜாவின் கண்களில் தயவு கிடைத்து ஒட்டுமொத்த யூத இனமும் அழிவிலிருந்து காப்பாற்றப்பட பரத்திலிருந்து உத்தரவு வந்தது. சரி தானே!

இன்னும் இந்தப் பழைய ஏற்பாட்டு மகாராணி ஜெபத்தில் புதிய ஏற்பாட்டுப் பார்வை பெற்றவளாக இருந்துள்ளாள். மொர்தெகாய் உட்பட சூசானின் யூதர்களை ஜெபிக்கச் சொன்னதின் மூலமாக, நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது (யாக் 5:16) என்பதின் தாற்பரியத்தைப் புரிந்தவளாக இருந்துள்ளாள். இன்னும் பிறரை ஜெபிக்கச் சொல்லுகிற காரியத்தில் எஸ்தருக்குப் பவுலடியாரின் சிந்தை இருந்துள்ளது (ரோமர்15:30-32).

அப்படியானால் அருமையானவர்களே! நம்முடைய பக்தி வாழ்வில் உபவாசமும், ஜெபமும் எந்த அளவில் இருக்கிறதென்பதை நாம் சிந்திக்கக் கடமைப்பட்டுள்ளோம். இக்காரியத்தில் எஸ்தரின் பார்வை நமக்குத் தேவை. எவ்வளவு பெரிய பிரச்சனையாக, சவாலாக இருந்தாலும் தேவனின் வல்லமைக்கும், அதிகாரத்துக்கும் கட்டுப்படாதது என்று எதுவுமில்லை. ஆகவே, உபவாசம் மற்றும் ஜெபம் சம்பந்தமாக நம்முடைய பார்வையை நாம் மாற்றி அமைப்போம்.

## II எஸ்தர் தன் பக்தியை ஒளிக்காதவளாக இருந்தாள்

தன் பயபக்தியைப் பளிச்சென மின்னப் பண்ணின எஸ்தர் மகா ராணியிடமிருந்து நமக்குக் கிடைக்கும் இரண்டாம் பாடம், பிறரை ஈர்க்கும்படியான பக்தி வாழ்வு பற்றியது.

இரட்சகர் இயேசு ஆண்டவர் பற்றியும், அவர்தம் போதனைகள் பற்றியும் அறிந்து கொள்ளும்படியான பாக்கியம் இந்த மகாராணிக்குக் கிடைக்காவிட்டாலும், கடந்த ஈராயிரம் ஆண்டுகளாகப் புகழ் மணம் பரப்பும் அவருடைய மலைப்பிரசங்க வார்த்தைகளுக்கு, அவர் பிறப்பதற்கு ஓர் 500 ஆண்டுகளுக்கு முன்பே இவள் தன் பக்தி செயல்பாட்டின் மூலம் இலக்கணம் கற்பித்திருக்கிறாள். எப்படியெனில், **விளக்கைக் கொளுத்தி மரக்காலால் மூடி வைக்காமல், விளக்குத் தண்டின்மேல் வைப்பார்கள்; அப்பொழுது அது தன் வீட்டிலுள்ள யாவருக்கும் வெளிச்சம் கொடுக்கும். அவ்விதமாய், மனிதர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப் படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப்**

**பிரகாசிக்கக்கடவது.** (மத் 5:15,16) என்னும் இயேசுவின் இவ்வரிகளின்படி வாழ்ந்துள்ளாள். புரியவில்லை என்கிறீர்களா? எஸ்தர் மொர்தெகாய்க்குச் சொன்னது என்ன? **நானும், தாதிமாரும் உபவாசம் பண்ணுவோம்** ''நானும்'' என்பது புரிகிறது. ''தாதிமாரும்'' என்பது எப்படி? யார் இந்தத் தாதிமார்கள்? யூதப் பெண்களா? கண்டிப்பாக இல்லை. அடிமைப் பெண்களாய் தேசமெங்கும் சிதறித்திரிந்த யூதப்பெண்களா அரமனைப் பணிப்பெண்களாக இருந்திருக்க முடியும்? வாய்ப்பே இல்லை. விக்கிரக வழிபாடு உடையவர்கள் தான் அங்கிருந்திருக்க வாய்ப்புண்டு. அவர்களும் சேர்ந்து இவளோடு உபவாசம் இருந்திருக்கிறார்களே!

அப்படியானால் என்ன தெரிகிறது? ஒரு கட்டத்தில், **தன் குலத்தையும், தன் பூர்வோத்தரத்தையும்** கூட வெளியில் சொல்ல முடியாமல் இருந்த இந்த எஸ்தர் (எஸ்தர் 2:10), தேவன் அனுமதித்த நேரம் வந்தபோது, ''மெய்யான தேவன் பற்றியும், மெய்த் தேவ வணக்கம்'' பற்றியும் தன்னோடிருந்தவர்கள் **அறியும்படியாக மாத்திரமல்ல**, அவர்களும் **தேவனுக்குப் பிரியமானதைச் செய்யும்படியாக** வாழ்ந்துள்ளாளே! **தாதிமாரும் உபவாசம்** இருந்துள்ளது ஆச்சரியமாக இல்லையா? உபவாசம் என்பது, இன்றைய கிறிஸ்தவத்தில் **உபவேசமாக** மாறிவிட்டது. உபவாசத் திற்கு வேதம் போதிக்கும் எந்த லட்சணமும் கடைப்பிடிக்கப் படுவதில்லை. ஆனால், எஸ்தரின் நாட்களில் உபவாசம் என்பது, **அல்லும் பகலும் புசியாமலும், குடியாமலும் இருப்பது.** ஆம், அது பக்தி வாழ்வின் ஒரு முத்தின நிலை.தேவன் பற்றியும், அவருடைய வாக்குத்தத்தங்கள் பற்றியும் ஆழமான புரிதல் உள்ளவர்கள் தான் மனமுவந்து உபவாசத்தை மேற்கொள்வார்கள். அப்படியானால், விக்கிரகப் பின்னணி கொண்ட தாதிமார்களுக்கு பக்திப் பற்று எப்படி வந்தது, யாரால் வந்தது?

அருமையானவர்களே! நம்முடைய இறைப் பக்தியும், பக்திச் செயல்பாடுகளும் எந்நிலையில் உள்ளது? எஸ்தர் மகாராணி தன் ஆன்மீகச் செல்வாக்கைத் தன்னோடிருந்தவர்கள் மீது எந்தளவு செலுத்தியுள்ளாள் பாருங்கள்! செல்வாக்கைச் செலுத்துவது என்பது அதிகாரத்தைப் பிரயோகப்படுத்துவதுபோல் அல்ல. மாறாக, ஆன்ம வாழ்வின் ஒவ்வொரு நகர்விலும், அதாவது, சொல்லிலும், செயலிலும் பிறர் வாழ்வில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்துவது. ஆகா, இது சரியாக உள்ளதே, ஏன் நாமும் இப்படிச் செய்யக் கூடாது என்ற ஓர் எண்ணத்துக்குள் உடனிருப்பவர்களை மெல்ல, மெல்ல இழுத்துக்கொண்டு வருவது. எஸ்தர் இப்படித்தான் தன் பக்தி வாழ்வில் நடந்துள்ளாள். ஆனால், நாம் எப்படி? கிறிஸ்தவர்கள்

என்பதை பிறர் அறிந்து கொள்ளக்கூடாது என்று எண்ணுகிறவர்கள் கிறிஸ்தவத்தில் ஏராளம் இருக்கிறார்கள். கேட்டால் இரகசிய கிறிஸ்தவர்களாம். கிறிஸ்தவமும், இரகசியமும் ஒருசேர இருக்க முடியாது. **மனிதர் முன்பாக தன்னை அறிக்கை பண்ணும் படியாகவே இயேசு உறுதியாக போதித்துள்ளார்.** (மத் 10:32), பேதுருவும், யோவானும் தங்களைப் பயமுறுத்திப் பணியவைக்க முயற்சித்த ஆலோசனைச் சங்கத்தாருக்கு, ''நாங்கள் கண்டவைகளையும், கேட்டவைகளையும் பேசாமலிருக்கக் கூடாதே'' என்றார்கள். (அப் 4:20). இந்த உண்மைகளைப் புரிந்து நம் பக்தி வாழ்க்கையை நாம் நடத்துவது மிகமிக முக்கியம்.

## III **எஸ்தர் எதற்கும் துணிந்தவளாய் இருந்தாள்**

தன் பயபக்தியைப் பளிச்சென மின்னப் பண்ணின எஸ்தர் மகாராணியிடமிருந்து நமக்குக் கிடைக்கும் இன்னுமொரு பாடம், விளைவுகள் பற்றிக் கவலைப்படாத பக்தி வாழ்வு பற்றியது.

மொர்தெகாயின் எச்சரிப்பின் வார்த்தைகளுக்கு எஸ்தர் மகாராணி கொடுத்த மறுமொழியில், ''இவ்விதமாகச் சட்டத்தை மீறி, ராஜாவினிடத்தில் பிரவேசிப்பேன்; நான் செத்தாலும் சாகிறேன் என்று சொல்லச் சொன்னாள்'' (எஸ்தர் 4:16) அப்படி என்ன மொர்தெகாய் எச்சரிப்பு தந்தான்? **நீ ராஜாவின் அரமனையிலிருக்கிறதினால், மற்ற யூதர் தப்பக் கூடாதிருக்க, நீ தப்புவாயென்று உன் மனதிலே நினைவு கொள்ளாதே** (எஸ்தர் 4:13) அதாவது, நீ அரமனை வாசியாய், பட்டத்து அரசியாய் இருப்பதால் இன அழிப்புச்சட்டம் உன்னைத் தப்பவிடும் என்று நினைக்காதே, உனக்கும் ஆபத்தும், அழிவும் வந்து சேரும் என்று எச்சரித்தான். இக்கடும் எச்சரிப்பு அவளைச் சிந்திக்கத் தூண்டியிருக்கும். சந்தேகமில்லை ஆயினும், அதைத்தாண்டி **அவள் பக்திதான்** அவளைச் **செயலில்** இறங்க வைத்திருக்கும். ஆம், ஒட்டுமொத்த யூத குலத்தின் மீது வரும் பேரழிவு பெரிதா? அல்லது தனி ஒருத்தியாகிய என் உயிர் பெரிதா? என்ற கேள்வி அவள் மனதுக்குள் எழுந்திருக்கும். அப்படித்தானே!

பொதுவாக, உயிரை மாய்த்துக் கொள்வதற்கு யாரும் விரும்பமாட்டார்கள். பக்தி உள்ளவர்களும் இதற்கு விதிவிலக்கு அல்ல.(II ராஜா. 20:1-3) உயிரைக் கொடுப்பதற்குப் பதிலாக வேறு எதை வேண்டுமானாலும் கொடுக்கத் தயாராயிருப்பார்கள். இந்த உண்மையைச் சாத்தானும் புரிந்து வைத்திருந்தான். எனவே தான், கர்த்தர் கொடுத்த எல்லாவற்றையும் கர்த்தர் எடுத்துக்கொண்ட பிறகும், தன் உத்தமத்திலே உறுதியாய் இருந்த யோபுவுக்கு எதிராக

(யோபு 1:21) மீண்டும் தேவ சந்நிதிக்குப் போன சாத்தான், கர்த்தரிடத்தில், **தோலுக்குப் பதிலாகத் தோலையும், தன் ஜீவனுக்குப் பதிலாகத் தனக்கு உண்டான எல்லாவற்றையும் மனுஷன் கொடுத்து விடுவான். ஆனாலும், நீர் உம்முடைய கையை நீட்டி, அவன் எலும்பையும், அவன் மாம்சத்தையும் தொடுவீரானால்; அப்பொழுது அவன் முகத்துக்கு எதிரே உம்மைத் தூஷிக்கானோ பாரும்** என்றாள் (யோபு 2:4,5). அதாவது, ''உயிர் என்று வந்தால் எந்தப் பக்திமானும் பயந்து விடுவான்'' என்பது சாத்தானின் வாதம்.

ஆனால், அன்பானவர்களே, தேவனுக்கடுத்த வாழ்வில் விதிவிலக்கானவர்கள் எப்பொழுதும் இருந்துள்ளார்கள் என்பதை நாம் வேதாகமத்தின் பக்கங்களில் பார்க்க முடியும். அவர்கள் தங்கள் உயிரைத் துச்சமென மதித்து, விளைவுகள் பற்றிக் கவலைப்படாமல் தங்கள் பக்தி வாழ்வை மேற்கொண்டுள்ளார்கள். சாத்ராக், மேசாக், ஆபத்நேகோ, தானியேல் போன்றோர் இப்பட்டியலில் தங்களை இணைத்துக்கொண்டவர்கள். புதிய ஏற்பாட்டில் தன் பக்திக்கும், வைராக்கியத்துக்கும் நிகரற்றவன் என்று முத்திரை பதித்துள்ள பவுலடியாருக்குள்ளாக இருந்த பக்தி சிந்தை எஸ்தருக்குள்ளாகவும் இருந்தது. ஆச்சரியமாக உள்ளது ! எப்படியெனில், தன் ஊழியத்தின் ஒரு கட்டத்தில், **கட்டுகளும், உபத்திரவங்களும் எனக்கு வைத்திருக்கிறதென்று பரிசுத்த ஆவியானவர் பட்டணந்தோறும் தெரிவிக்கிறதை மாத்திரம் அறிந்திருக்கிறேன். ஆகிலும், அவைகளில் ஒன்றையுங் குறித்துக் கவலைப்படேன்; என் பிராணனையும் நான் அருமையாக எண்ணேன்...** என்றாள் (அப் 20:23,24). பவுலடியார் ஊழியத்தை விட உயிர் பெரிதல்ல என்று எண்ணியதுபோல், எஸ்தர் என் தேவ மக்களைவிட என் உயர் பெரிதல்லவென்று எண்ணித் துணிந்து செயல்பட்டாள்.

அருமையானவர்களே! தம்முடைய பக்திவாழ்வில் நாம் எஸ்தரின் சிந்தை பெற்றவர்களாக உள்ளோமா? எஸ்தர் போன்று உயிரை விடவும், பவுலடியார் போன்று ''கிறிஸ்துவுக்காக'' எல்லாவற்றையும் நட்டமென்று விடவும், அவருடைய சபைக்காக, சத்தியத்துக்காகக் குப்பையுமாக எண்ணவும் (பிலி 3:11) தயாராக இல்லையென்று சொன்னால், நம் பக்தி வாழ்வில் மின்னிட முடியாது. சிலுவைக்குப் பின் வாழக்கூடிய நமக்கு கிறிஸ்துவும், கிறிஸ்துவின் சிலுவை உபதேசமும், கிறிஸ்து கட்டின சபை பற்றிய உபதேசமும், பரிசுத்த வாழ்வு பற்றிய உபதேசமும் மிகவும் முக்கியம். இவைகளை உள் வாங்கினவர்களாக நம் பக்தி வாழ்வை நடத்துவேம். ஆமென்! ✝

# *நற்செய்தியின் வல்லமை*

Bro. J.C. **சோட்**

அப்போஸ்தலன் பவுலடியார் ரோமா புரியாருக்கு இவ்விதம் எழுதினார். கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படன்; முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவ பெலனாயிருக்கிறது. விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறபடி, விசுவாசத்தினால் உண்டாகும் தேவ நீதி விசுவாசத்திற்கென்று அந்த சுவிசேஷத்தினால் வெளிப்படுத்தப்படுகிறது (ரோமர் 1:16,17). வேதாகமத்தின் இந்த இரண்டு வசனங்கள் குறித்து நிறைய சொல்லப்பட்டுள்ளது. அவர்கள் என்னவென்று கவனித்து என்ன பொருள் தருகிறதென்று பார்ப்பபோம்.

நற்செய்தி என்றால் என்ன? அது எதுவாக இருந்தாலும், பவுலடியார் நான் அதைக் குறித்து வெட்கப்படேன் என்று கூறுகிறார். அதற்குக் காரணம் அது இரட்சிப்புக்குத் தேவபெலனாயிருப்பது. அதாவது இரட்சிக்கும் வல்லமையை நற்செய்தியை கொண்டுள்ளது. அதுமாத்திரமல்ல, தேவ நீதியானது ஆரம்ப முதல் இறுதி வரை என்னவென்று நம்மால் கண்டுபிடிப்பதில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. ஆகையால், நற்செய்தி என்பது என்னவென்று நம்மால் கண்டுபிடிக்க முடிந்தால், அதில் தேவவல்லமை எங்கே இருக்கிறதென்பதைத் தீர்மானிக்க முடியும்.

I கொரிந்தியர் 15:1-4-ல், பவுலடியார் இவ்விதம் சொல்லியுள்ளார். அன்றியும் சகோதரரே, நான் உங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன்; நீங்களும் அதை ஏற்றுக்கொண்டு அதிலே நிலைதிருக்கிறீர்கள். நான் உங்களுக்குப் பிரசங்கித்த பிரகாரமாய், நீங்கள் அதைக் கைக்கொண்டிருந்தால், அதினாலே நீங்கள் இரட்சிக்கப் படுவீர்கள்; மற்றப்படி உங்கள் விசுவாசம் விருதாவாயிருக்குமே. நான் அடைந்ததும் உங்களுக்குப் பிரதானமாக ஒப்புவித்ததும் என்னவென்றால், கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து அடக்கம் பண்ணைப்பட்டு வேதவாக்கியங்களின்படி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார் என்று. நற்செய்தி என்பது கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்தெழுதல் என்று இங்கே பவுல் கூறுகிறார். கொரிந்தியர்களிடத்தில் நான் அதைப் பெற்றுக் கொண்டேன் என்றும், அதை அவர்களுக்குப் பிரசங்கித்தேன் என்றும், அதை அவர்களுக்குப் பிரசங்கித்தேன் என்றும், அதைப் பெற்றுக் கொண்டவர்கள் இரட்சிப்படைந்தார்கள் என்றும் சொன்னார்.

இங்கே கேள்வி கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் ஒருவனை எப்படி இரட்சிக்க முடியும் என்பது. இதையே வேறுவிதமாகச் சொல்லவேண்டுமானால், நற்செய்தியின் வல்லமையினாலே நாம் இரட்சிக்கப்படும்படியாய் இதன் உண்மைகளை

நம் வாழ்வில் எப்படிப் பொருத்துவது. **முதலாவது** நாம் விசுவாசிப்ப தற்கான உண்மைகள் இவை என்பதை உணர வேண்டும். **இரண்டாவது,** அதே அப்போஸ்தலன் பவுலடியார், ரோமபுரியார் அந்த உபதேசக் கோட்பாடுகளுக்குக் கீழப்படிந்தார்கள் என்று பேசுகிறார்.

ரோமர் 6-ம் அதிகாரத்தின் முதல் பாகத்தில், அவர்கள் பாவத்திற்கு எப்படி மரித்தார்கள் என்றும் , தண்ணீர் ஞானஸ்நானத்தில் எபபடி அடக்கம் பண்ணப்பட்டார்கள் என்றும், புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு, தண்ணீருக்குள் அடக்கம் பண்ணப்பட்ட நிலையிலிருந்து வெளியே வந்தார்கள் என்றும் காட்டுகிறார். அதாவது, கிறிஸ்து மரித்தார், அடக்கம் பண்ணப்பட்டார், பிறகு உயிர்த்தெழுந்தார். தங்கள் கீழ்ப்படிதல் மூலமாக ரோமாபுரியார் கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்தெழுதலை அடையாளப்படுத்துகிறார்கள். மரணத்துக்கேதுவான பாவத்துக்கானாலும், நீதிக்கேதுவான கீழ்ப்படிதலுக்கானாலும், எதற்குக் கீழ்ப்படியும்படி உங்களை அடிமைகளாக ஒப்புக்கொடுக்கிறீர்களோ அதற்கே கீழ்ப்படிகிற அடிமைகளாயிருக்கிறீர்களென்று அறியீர்களா? முன்னே நீங்கள் பாவத்திற்கு அடிமைகளாயிருந்தும், இப்பொழுது உங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு நீங்கள் மனப்பூர்வமாய்க் கீழ்ப்படிந்ததினாலே தேவனுக்கு ஸ்தோத்திரம் [ரோமர் 6:17,18]. இப்பொழுது கவனமாகக் கவனியுங்கள். அவர்கள் பாவத்துக்கு அடிமைகளாயிருந்தார்கள். இப்பொழுது நீதிக்கு அடிமைகளாக மாற்றப்பட்டிருக்கிறார்கள். இந்த மாற்றத்தைக் கொண்டு வந்தது எது? தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு மனப்பூர்வமாய்க் கீழ்ப்படிந்ததினாலே இது சாத்தியமாயிற்று. அவர்கள் கீழப்படிந்த உபதேசம் மட்டும் இதற்குக் காரணமாயிராமல், உபதேசச்சட்டம் காரணமாயிருந்துள்ளது. அங்கே உபதேசம் விசுவாசிக்கும் படியான உண்மைகளாயிருந்தது. இதைத் தாண்டி அவர்கள் அந்த உபதேச சட்டத்திற்குத் தங்களைக் கீழ்ப்படுத்தினார்கள். அவர்களுடைய கீழ்ப்படிதலிலே அந்த உபதேசமானது எதோ வகையில் வெளிப்படுகிறது. இது அவர்கள் கீழ்ப்படியும்படியான ஒரு செயல். நற்செய்திக்குக் கீழ்ப்படிவதின் மூலம், அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மரித்தார்கள். தண்ணீருக்குள் அடக்கம் பண்ணப்பட்டார்கள் – ஞானஸ்நானம் – பிறகு புதிய ஜீவனுக்காகத் தண்ணீரிலிருந்து வெளியே வந்தார்கள். இதன் மூலம், தங்கள் கீழ்ப்படிதலினாலே கர்த்தரின் மரணம், அடக்கம், உயிர்தெழுதலை அடையாளப்பூர்வமாகக் காட்டியிருக்கிறார்கள்.

பவுலடியார், தேவனை அறியாதவர்களுக்கும், கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும் படிக்குக் [II தெச.1:7-9] கிறிஸ்து மீண்டும் வருகிறார் என்று கூறுகிறார். பேதுரு ஆசிரியரும், நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டிலே துவங்குங்காலமாயிருக்கிறது முந்தி

நம்மிடத்திலே அது துவங்கினால் தேவனுடைய சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களின் முடிவு என்னமாயிருக்கும்? [ I பேதுரு 4:17]. அப்படியனால், ஒருவன் எப்படி நற்செய்தியானது உண்மைகளை மாத்திரம் கொண்டிராமல், கட்டளைகளையும் கொண்டுள்ளது. கிறிஸ்து தாமே இவ்விதம் சொல்லியுள்ளார். பின்பு அவர் அவர்களை நோக்கி நீங்கள் உலகமெங்கும்போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ் நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனே ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான் [மாற்கு 16:15,16].

பேதுருவும், மற்ற அப்போஸ்தலர்களும் பெந்தெகொஸ்தே நாளில் நற் செய்தியைப் பிரசங்கித்தார்கள். நற்செய்தியின் உண்மைகள் பிரசங்கத்தின் மூலம் அறிவிக்கப்பட்ட பிறகு, கேட்டவர்களுடைய இருதயத்தில் விசுவாசம் ஏற்பட்ட பிறகு, அவர்கள் இப்படியாகக் கேட்டார்கள். இதை அவர்கள் கேட்ட பொழுது இருதயத்திலே குத்தப் பட்டவர்களாகி பேதுருவையும், மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து சகோதரரே நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்றார்கள். பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ் நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள் [அப். 2:37,38]. அதன் விளைவாக சுமார் 3000 பேர் நற்செய்திக்குக் கீழ்ப்படிந்தவர்களாகி அன்றைய தினம் சபையிலே சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள் [அப்.2:41,47].

பவுலடியார் சுவிசேஷத்தை நற்செய்தி என்று பொருள்படுத்தினார் [ரோமர் 10:15]. சுவிசேஷம் என்றால் என்ன என்று அறியும் போது சுவிசேஷம் என்ன செய்யும் என்பதைத் தெரியும் போது, அது ஏன் நற்செய்தி என்றழைக்கப்படுகிறது என்பதைப் புரிந்து கொள்ள முடியும். இச்செய்தியானது உலகமனைத்திற்குமானது என்பது உறுதி செய்யப்பட்ட படியால், கர்த்தர், இது வானத்தின் கீழிலிருக்கிற சகல சிருஷ்டிகளுக்கும் கொண்டு செல்லப்பட வேண்டுமென்று கட்டளையிட்டார் [மாற்கு 16:15; மத். 28:18].

ஆக, விசுவாசிக்கிற ஒவ்வொவரும் இரட்சிக்கப்படும்படியாய் சுவிசேஷமானது தேவ பெலனாயிருக்கிறது. இழந்து போனவர்களை இரட்சிப்பதற்குத் தேவன் நற்செய்தியின் மூலம் கிரியைநடப்பிக்கிறார்

இதற்கு இணையானது எதுவுமில்லை. ஒருவன் தன் விருப்பம் போல இரட்சிக்கப்படும்படியாய் எதற்கு வேண்டுமானாலும் முயற்சிக்கலாம். ஆயினும், தன் ஆத்தும இரட்சிப்புக்கு கிறிஸ்துவின் சுவிசேஷம் போன்று வல்லமையுடையதைக் கண்டுபிடிக்க முடியாது.

இங்கே இதை நினைவில் கொள்ள வேண்டும்: வல்லமை அங்கே இருந்தாலும், தேவனிடமிருந்து வந்த செய்தியில் அது அடங்கியிருந்தாலும், ஓர் ஆத்துமாவிலே மாற்றத்தைக் கொண்டு வருவதற்கு, கேட்பவர் அதை விசுவாசித்து அதன் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டும். அப்பொழுது தான் சுவிசேஷத்தின் வல்லமை ஒருவனுடைய ஆத்துமாவுக்கு வந்து சேர்ந்து இரட்சிப்பை நடப்பித்து நித்திய ஜீவனுக்கான நம்பிக்கையைப் பெற்றுத் தரும்.

ஆம், தேவ வல்லமை நற்செய்தியில் இருக்கிறது உலகமனைத்திலும் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை விட வல்லமை வேறெதற்கும் இல்லை. இல்லவே இல்லை. ✝

## உங்களுக்குத் தெரியுமா?

### இயேசு கிறிஸ்துவின் சபை

1. தேவனுடைய வீடு – I தீமோ 3:15
2. தேவனுடைய ஆவிக்குரிய மாளிகை – I பேதுரு 2:5
3. தேவனுடைய ஆலயம் – I கொரி 3:16
4. தேவனுடைய பண்ணை – I கொரி 3:9
5. தேவனுடைய மந்தை – I பேதுரு 5:2,3
6. கிறிஸ்துவின் சரீரம் – I கொரி 12:2
7. கிறிஸ்துவின் மணவாட்டி – II கொரி 11:2

## பெண்கள் பகுதி

## பெண்களுக்காக பெண்கள்

Sis. **ரேச்சல் நாயகம்**

**கி**றிஸ்துவுக்குள் அன்பான சகோதரிகளுக்கு இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். கிறிஸ்தவப் பெண்களாகிய நாம் எல்லோரும் எல்லா சமயங்களிலும், எல்லாவற்றையும் கற்று செயல்படுத்த முடிவதில்லை. ஒரு முன் மாதிரி தேவைப்படுகிறது. கிறிஸ்தவப் பெண்களாகிய நாம் ஞாயிறு ஆராதனையில் பிரசங்கங்களை கேட்கிறோம். அரையும், குறையுமாக எடுத்துக் கொண்டு முழுமையாக செயல்படுத்த முடிவதில்லை. முழு பிரசங்கத்தையும் வனிக்காமல், குறிப்பும் எடுக்காமல் வீட்டுக்குச் சென்றால் எந்தப் பயனும் இல்லை. குறிப்பாக, இளம் வயதுள்ள ஸ்திரீகள் தங்கள் வேலைப் பளு, குடும்பப் பொறுப்பு, பிள்ளைகளை கவனித்தல் போன்ற காரியங்களில் கவனம் செலுத்தவேண்டியிருப்பதால் வேத வாக்கியங்களின் ஆழத்தை புரிந்து கொள்ளாமல் போய்விட வாய்ப்புள்ளது. இவர்களைப் பார்த்து வளரும் பிள்ளைகளும் தாயைப் போன்று அரையும், குறையுமாகக் கற்றுக் கொள்கிறார்கள்

### கவனியுங்கள்

அருமையான சகோதரிகளே! சில சமயங்களில் நம்முடைய அபிப்ராயங்களும், புரிந்து கொள்ளுதலும் சரியாக இல்லாதிருந்தும் சரி என்று எண்ணிக் கொள்கிறோம். சூழ்நிலையையோ, உறவு களையோ என்னால் ஏற்று சமாளிக்கமுடியும் என்று எண்ணுகிறோம். ஆனால், வௌவாலைப் போன்று கண் வெளிச்சம் இல்லாமல் இருக்கிறோம் என்பதை மறந்து விடுகிறோம். அது மிகவும் ஆபத்தானது. சாலமோன் ஞானி, நீதி 14:12–ல் இவ்வாறாக எச்சரிக்கிறார். **மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழி உண்டு ; அதின் முடிவோ மரண வழிகள்** என்று.

சில நேரங்களில் நம்மை விட மூத்த சகோதரிகளின் உதவி நமக்குத் தேவைப்படுகிறது. அவர்கள் தங்கள் பொறுப்பில் நம்மை அணைத்து நாம் நடக்க வேண்டிய வழிகளை விளக்கிச் சொல்லுவார்கள். ஆக்கில்லா, பிரிஸ்கில்லா அப்: 18–ல் அப்பொல் லாவை சேர்த்துக் கொண்டு புத்தி சொன்னதுபோல. ரூத் புத்தகத்தில் நகோமி, ரூத்திற்கு ஆலோசனை சொன்னது போல நமக்கு முதிர் வயதுள்ள ஸ்திரீகளின் ஆலோசனைகள் தேவை.

முதிர்வயதுள்ள ஸ்திரீகளும் அப்படியே பரிசுத்தத்துக் கேற்ற விதமாய் நடக்கிறவர்களும், அவதூறு பண்ணாதவர்களும், மதுபானத்துக்கு அடிமைப்படாதவர்களுமாயிருக்கவும், தேவ வசனம் தூஷிக்கப்படாதபடிக்குப் பாலிய ஸ்திரீகள் தங்கள் புருஷரிடத்திலும், தங்கள் பிள்ளைகளிடத்திலும் அன்புள்ளவர்களும், தெளிந்த புத்தியுள்ளவர்களும், கற்புள்ளவர்களும், வீட்டில் தரித்திருக்கிறவர்களும், நல்லவர்களும், தங்கள் புருஷருக்குக் கீழ்ப்படிகிறவர்களுமாயிருக்கும்படி, அவர்களுக்குப் படிப்பிக்கத்தக்க நற்காரியங்களைப் போதிக்கிறவர்களுமாயிருக்கவும் முதிர்வயதுள்ள ஸ்திரீகளுக்குப் புத்திசொல்லு. (தீத்து 2:3-5).

அருமையான சகோதரிகளே! மேலே வாசித்த வசனப்பகுதி விசேஷமாக பெண்களுக்காக பரிசுத்த ஆவியின் ஏவுதலினாலே பவுலின் மூலமாக தீமோத்தேயுவுக்கு எழுதப்பட்டது.

இந்த வசனப் பகுதியில் முதிர் வயதுள்ளவர்களும், பாலிய ஸ்திரீகளும் எப்படி வாழ வேண்டும் என்று தேவன் கூறுகிறார். பல சமயங்களில் இவ்வசனப் பகுதி நமக்கு பிடிப்பதில்லை. யாருடைய புத்திமதிகளையும் யாரும் ஏற்கத் தயாராக இல்லை. சில சபைகளில் பெரியவர்கள், சிறியவர்கள் இருதரப்பினரும் ஒட்டுவதே இல்லை. கிறிஸ்தவ சகோதரிகள் ஒருவருக்கொருவர் அன்புடனும், இணக்கமுடனும் இருக்க வேண்டும் என்ற விசேஷித்த உறவை தொலைத்துவிடுகின்றனர்.

பெண்கள் கற்றுக் கொள்ள வேண்டும் என்பது அவசியம், அதுவும் அமைதியாக கற்றுக் கொள்ளவேண்டும் என்று வேதம் சொல்கிறது. பழைய ஏற்பாட்டிலாகட்டும், புதிய ஏற்பாட்டிலாகட்டும் பொதுவான கூடுகைகளில் ஆண்கள் போதிக்க வேண்டும் என்று கூறுகிறது. இதுவே, பெண்கள் போதிக்கவே கூடாது என்று அர்த்தமாகிவிடாது. பெண்களுக்கு பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் போதித்து, புத்தி சொல்ல கட்டளை பெற்றிருக்கிறோம்.

### ஒருவருக்கொருவர் உதவியாயிருக்க வேண்டும்

ஒருவரையொருவர் நேசித்து, அன்பு செலுத்த வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். அதற்கு வயது வரம்பு கிடையாது. இதுதான் தேவ திட்டம். யாக்கோபு 4:14-ல் வாசிக்கிறோம், **நாளைக்கு நடப்பது உங்களுக்குத் தெரியாதே. உங்கள் ஜீவன் எப்படிப்பட்டது?** கொஞ்சங்காலந் தோன்றிப் பின்பு தோன்றாமற்போகிற புகையைப்

போலிருக்கிறதே. எனவே, கிடைக்கும் தருணத்தை பயன்படுத்தி ஒருவருக்கொருவர் புத்தி சொல்ல வேண்டும். இதிலிருந்து நாம்தப்பிக் கொள்ளமுடியாது. தேவன் இன்றைக்கும் நம்மைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். வசனம் கருப்பு, வெள்ளை நிறத்தில் இன்றும் நம் கையில்தான் இருக்கிறது.

சரி, புத்தி சொல்லும் போது என்ன சொல்லுகிறோம் என்பது முக்கியமானது என்றாலும் எப்படிச் சொல்லுகிறோம் என்பதுதான் அதைவிட முக்கியம். **அன்புடன் சத்தியத்தை கைக்கொண்டு** என்று (எபே4:15)ல் வாசிக்கிறோம். தீத்து 2:5-ல் தேவ வசனம் **தூஷிக்கப்படாதபடி** என்று பார்க்கிறோம். நம் செய்கையால், பேச்சால் வசகத்திற்கு இழுக்கு வந்து விடக்கூடாது. தேவ சாயலில் நாம் படைக்கப்பட்டிருப்பதால் நம் மூலமாக இந்த உலகம் தேவனைப் பார்க்க வேண்டும். தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிவதுதான் நம் **பிரதான விருப்பமாக** இருக்கவேண்டும். மறந்து விட வேண்டாம். தேவன் அதற்கு உதவி செய்வாராக!! ஆமென்!! ✝

---

## இச்சகமான பேச்சு

1. **முக புகழ்ச்சிக்காக பேசுதல்** – Flattering (**நீதி** 26:28)
2. **பெருமையான பேச்சு** – Pride (**சங்** 12:3-4)
3. **புத்தியீனமான பேச்சு** – Indiscretion (**எபே** 5:4)
4. **கடினமான பேச்சு** – Hard Words (**யூதா** 1:15)
5. **சொந்தப் பேச்சு** – Talking idly (**ஏசா** 58:13)
6. **வீண் பேச்சு** – Gossip, Loquacity (**மத்** 12:36)
7. **பொய் பேச்சு** – Lying Words (**நீதி** 13:5)
8. **பக்தியில்லா (கிழவிகள்) பேச்சு** – Irreverent - Oldie (**I தீமோ** 4:7)
9. **விரோதப் பேச்சு** – Evil Talks ( **யாக்** 4:11)
10. **தூஷணப் பேச்சு** – Blasphemy Talks ( **அப்** 6:11,13)

வாலிபர் பகுதி

# பிறரை தீர்ப்புச் செய்யலாமா அல்லது கூடாதா?

Dr. ஏபில் நாயகம்

**கி**றிஸ்துவுக்குள் பிரியமான சகோதரர்களே! உங்கள் யாவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இன்ப நாமத்திலே அன்பான வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

மத்தேயு எழுதின சுவிசேஷத்தில் காணப்படும் மலை பிரசங்கம் வேதாகமத்தில் ஒரு முக்கியமான பகுதியாகும் . இயேசு கிறிஸ்துவை பின்பற்ற விரும்பும் ஒருவர் எப்படி இருக்க வேண்டும் என்று விளக்கும் பகுதி இது. ஐந்தாம் அதிகாரத்தில் 12 வசனங்களில் இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றும் ஒருவருக்கு இருக்கவேண்டிய குணாதிசயங்கள் என்ன என்பதை நாம் வாசிக்கமுடியும். 13 தொடங்கி 16 வசனங்களை வாசிக்கும் பொழுது இயேசு கிறிஸ்துவை பின்பற்றும் ஒருவரால் ஏற்படக்கூடிய தாக்கம் என்ன என்பதை நாம் தெரிந்துகொள்ளமுடியும். அதாவது, நாம் உப்பாகவும், ஒளியாகவும் இந்த உலகத்திற்கு இருக்கிறோம் என்று. அதைத்தொடர்ந்து 17 தொடங்கி 48 வரை நாம் வாசித்தால் கிறிஸ்துவினுடைய நீதி என்பதை புரிந்துகொள்ளமுடியும்.

6 வது அதிகாரத்தில் கிறிஸ்தவனாக வாழ்வதன் நோக்கத்தையும் அந்த நோக்கத்தை நிறைவேற்ற என்ன செய்ய வேண்டும் என்பதையும் நாம் தெரிந்துகொள்ளமுடியும். ஏழாம் அதிகாரத்தில் நாம் ஒருவருக்கு ஒருவர் எப்படி இருக்க வேண்டும் என்பதையும் நம்முடைய முடிவு எப்படியாக இருக்கும் என்பது விவரிக்கப்பட்டு இருப்பதை நாம் கவனிக்கமுடியும். ஆக, மலைப் பிரசங்கத்தின் மூன்று அதிகாரங்களும் நம்முடைய வாழ்க்கைக்கு பிரயோஜனம் உள்ளவைகளாக இருக்கிறது.

இந்த மாதத்தின் தியானத்திற்காக மலைப் பிரசங்கத்தின் இறுதி அதிகாரமான ஏழாம் அதிகாரத்தின் முதல் ஐந்து வசனங்கள் நாம் தெரிந்துகொள்வோம். இங்கே ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சொல்லுகிற ஒரு காரியம் நாம் பிறரைக் குற்றவாளிகள் என்று தீர்க்காது இருக்க வேண்டும் என்பது . முதலாம் வசனத்தில் நீங்கள் குற்றவாளிகளென்று தீர்க்கப்படிக்கு மற்றவர்களை குற்றவாளிகள் என்று தீர்க்காததிருங்கள்ள என்று இயேசு கூறுகிறார். இந்த குறிப்பிட்ட வசனம், பிற மதத்தினரால் அதிகமாக விரும்பக்கூடிய ஒரு வசனம் என்று ஒரு வேத வல்லுநர் கூறுகிறார். அதற்கான காரணம், ஒருவரும் தாங்கள் குற்றம்சாட்டப்படுவதை

விரும்புவதில்லை. எனவே, அப்படிச் செய்யலாகாது என்று கூறுவதோடு மாத்திரமல்லாமல், வேதம் அப்படியே சொல்லுகிறது என்று இந்த வசனத்தை மேற்கோள் காட்டுவார்கள்.

இந்த வசனத்தின் வழியாக இயேசு கிறிஸ்து கூறும் காரியம் என்ன? நாம் பிறரை குற்றவாளிகள் என்று தீர்க்க முடியுமா? தீர்க்க டியும். எதன் அடிப்படையில் எப்படி செய்யமுடியும் என்ற கேள்விக்கான பதில் யோவான் 7:24ல் உள்ளது. நீதியின் படி தீர்ப்பு செய்யுங்கள் என்று வசனம் இங்கே சொல்வதை வாசிக்கமுடியும். அப்படியானால், என்று சொன்னால் அதனுடைய அர்த்தம், தேவனுடைய வசனங்களின் அடிப்படையில் ஒருவருடைய செயல்பாட்டை நாம் நிதானிக்க அனுமதிக்கப்பட்டு இருக்கிறோம். உதாரணமாக, இரட்சிக்கப்படுவதற்கு ஒருவர் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பது தேவனுடைய கட்டளையாக இருக்கிறது. அப்படி இருக்கும் பட்சத்தில், இரட்சிப்புக்கு ஞானஸ்நானம் தேவையில்லை என்று ஒருவர் சொன்னால், வசனத்தின்படி நாம் அவரை தவறு செய்கிறார் என்று தீர்க்க முடியும். மாறாக, நம்முடைய எண்ணத்தின் அடிப்படையில் நாம் ஒருவரை குற்றவாளியாக தீர்க்க இயலாது. வேத வசனங்களை கொண்டு மாத்திரம் நாம் பிறரை குற்றப்படுத்த முடியும். உதாரணமாக, யோவான் எழுதின சுவிசேஷம் 12ம் அதிகாரத்தில் மரியாள் என்ற ஸ்திரீ களங்கமில்லாத தைலத்தை இயேசு கிறிஸ்துவின் பாதங்களில் பூசின சம்பவத்தை நாம் வாசிக்கலாம். அதைப் பார்த்துக்கொண்டிருந்த யூதாஸ் இந்த தைலத்தை 300 பணத்துக்கு விற்று தரித்திரருக்கு கொடுக்கலாம் என்று நினைத்து அந்த ஸ்திரீயை குற்றப்படுத்த முற்பட்டான். இங்கே யூதாஸ் செய்தது தவறு. அந்த ஸ்திரீயின் எண்ண ஓட்டத்தை அவன் புரிந்து கொள்ளாமல், நீதியற்ற முறையில் குற்றப் படுத்தினான். இப்படிப்பட்ட மனப்பான்மையை தான் இயேசு கிறிஸ்து கூடாது என்கிறார்

முதலாம் வசனத்தின் முதல் பகுதியில், **நீங்கள் குற்றவாளி களென்று தீர்க்கப்படாத படிக்கு** என்று இயேசு கூறுவதை நாம் வாசிக்கமுடியும். அதனுடைய அர்த்தம் பிறரை குற்றவாளிகள் என்று தீர்ப்பதற்கு நாம் தீர்ப்பு வழங்குபவர்கள் அல்ல. தேவனுக்கு மட்டுமே அந்த அதிகாரம் உண்டு. அப்படி என்றால் அந்த வேலையை நாம் செய்யக்கூடாது. (யாக்கோபு 4:11,12).

அதுமட்டுமல்ல, பிறரை குற்றப்படுத்துவதற்கு முன், நாம் நம்மை பரிசோதித்துப் பார்க்கவேண்டும் என்று இங்கே இயேசு கட்டளையிடுகிறார். வசனம் 3ல், நீ உன் கண்ணிலிருக்கிற

உத்திரத்தை உணராமல் உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பை பார்க்கிறது என்ன? என்ற கேள்வியை நாம் வாசிக்க முடியும். இங்கு நன்றாக கவனித்தோமானால், உன் கண்ணில் இருப்பது உத்திரம் என்றும், சகோதரனுடைய கண்ணில் இருப்பது துரும்பு என்றும் சித்தரிக்கப்படுகிறது. அதனுடைய அர்த்தம் நம்முடைய பங்கில் பெரிதான குற்றங்களை வைத்து கொண்டு, பிறருடைய பங்கில் இருக்கும் சிறு குற்றங்களை நாம் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறோம் என்பதே . அப்படிச் செய்யலாகாது என்று இயேசு கூறுகிறார். நாம் முன்னே பார்த்த யூதாஸின் சம்பவத்தில், இதை நாம் கண்டு கொள்ள முடியும். காட்டிக் கொடுக்கப் போகிற ஒரு காரியத்தை செய்ய நினைக்கும் அவன், மரியாளின் ஒரு செயலை குற்றப்படுத்த வருகிறான். முதலில், அவன் தன்னை அல்லவா பரிசோதித்து இருக்க வேண்டும்? அதை விட்டுவிட்டு, மரியாளின் நற் காரியத்தை அவன் குற்றப்படுத்த முன் வருகிறான். பல நேரங்களில் நாம் அப்படிப்பட்ட காரியத்தில் ஈடுபட்டு விடுகிறோம். அது தவறு. தன்னைப் பின்பற்ற விரும்புகிற பிள்ளைகள் அப்படி இருக்கக் கூடாது என்பதை இயேசு கிறிஸ்து தெளிவாக விளக்குகிறார். நம்முடைய கண்ணில் உத்திரத்தை உணராமல், நாம் மற்றவர்கள் கண்ணில் இருக்கும் துரும்பை எடுத்துப்போட நினைக்கக் கூடாது.

ஒருவேளை, நாம் அப்படிச் செய்தால், **மாயக்காரன்** என்று இயேசுவால் அழைக்கப்படுகிறோம். வசனம் 5 இல், மாயக்காரனே, முன்பு உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை எடுத்துப் போடு. பின்பு உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பை எடுத்துப்போட வகை பார்ப்பாய் என்று வாசிக்கிறோம். அப்படியானால், தவறு செய்கிற ஒரு சகோதரரை அப்படியே விட்டு விடலாமா என்ற கேள்வி வருகிறது. பிரியமானவர்களே, இங்கே ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சொல்வது நாம் அவர்களைக் குற்றவாளிகள் என்று தீர்க்க வேண்டாம் என்று. ஆனால், நிச்சயமாக நாம் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். கலாத்தியருக்கு எழுதிய நிருபம் ஆறாவது அதிகாரம் முதலாம் வசனத்திலே, ஒருவன் யாதொரு குற்றத்தில் அகப்பட்டால் ஆவிக்குரியவர்களாகிய நீங்கள் சாந்தமுள்ள ஆவியோடு அப்படிப்பட்டவனை சீர் பொருந்த பண்ணுங்கள். ஆம் பிரியமானவர்களே, வசனத்தின் அடிப்படையில் ஒருவர் தவறு செய்யும் பொழுது அவரை குற்றப் படுத்துவதற்கு பதிலாக, அவருக்கு நாம் உதவி செய்ய வேண்டும். சாந்தமுள்ள ஆவியோடு அவர்களை சீர் பொருந்தப் பண்ணவேண்டும். அவர்களுடைய சூழ்நிலை, மனநிலை ஆகியவற்றை மனதில் கொண்டு என்ன காரணத்தினால் தவறுகிறார்கள் என்பதை கண்டறிந்து அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். இதைத்தான் வேதம் நமக்கு கற்றுத் தருகிறது.

கிறிஸ்தவ வாழ்க்கையில், தவறு செய்கிறவர்களை குற்றம் தீர்க்காமல், அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். 12வது வசனத்தை நாம் வாசிக்கும் பொழுது **தங்க வாக்கியம்** என்று அழைக்கப்படும் இந்த வசனம் சொல்வதை நாம் கவனிப்போம் ஆதலால், **மனுஷர் உங்களுக்கு எவைகளை செய்ய விரும்புகிறீர்களோ அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்** இதுவே நியாயப்பிரமாணமும் தீர்க்க தரிசனங்களுமாம். இந்த மனப்பான்மை நம் ஒவ்வொருவருக்கும் தேவையாக இருக்கிறது. ஒருவேளை நாம் தவறும் பொழுது பிறர் நம்மை குற்றப்படுத்த விரும்புவோம் அல்லது பிறர் நமக்கு உதவி செய்ய வேண்டும் என்று நினைப்போம்? நிச்சயமாக பெரிய உதவி செய்ய வேண்டும் என்று நினைப்போம். அப்படியென்றால் நாம் அதைத்தானே செய்ய வேண்டும்? கிறிஸ்துவைப் பின்பற்ற விரும்புகிற நாம் இப்படிப்பட்ட எண்ணம் கொண்டவர்களாக ஜீவிப்போம். சக சகோதரர்களுக்கு உதவியாக இருப்போம். தேவனுடைய ராஜ்யத்தில் ஒருவருடைய பாரத்தை ஒருவர் சுமந்து கிறிஸ்துவின் பிரமாணத்தை நிறைவேற்றுவோம். தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக! ✝

# ஒப்புக்கொடுங்கள்

1. உங்கள் நியாயத்தை
   கர்த்தரிடத்தில் ஒப்புக்கொடுங்கள் – யோபு 5:8

2. உங்கள் ஆவியை
   கர்த்தரிடத்தில் ஒப்புக்கொடுங்கள் – சங் 31:5

3. உங்கள் வழியை
   கர்த்தரிடத்தில் ஒப்புக்கொடுங்கள் – சங் 37:5

4. உங்கள் செய்கைகளை
   கர்த்தரிடத்தில் ஒப்புக்கொடுங்கள் – நீதி 16:3

5. உங்கள் ஆத்துமாவை
   கர்த்தரிடத்தில் ஒப்புக்கொடுங்கள் – 1 பேது 4:19

சிறுவர் பகுதி

## நாம் பயணிக்க வேண்டிய பெரும்பாதையான வழி

Dr. **பிரெய்ஸி**

**ஹா**ய் குட்டீஸ், தேவனுடைய கிருபையால் நீங்கள் எல்லாரும் நலமாயீருக்கிறீர்களென்றும், மாதந்தோறும் கட்டுரைகளை தவறாமல் வாசிக்கிறீர்களென்றும் நம்புகிறேன். இம்மாதம் ஒரு கிறிஸ்தவப் பிள்ளையாக நம் நடத்தை எப்படி இருக்கவேண்டும் என்பது குறித்துப் பார்ப்போம்.

பிரியமான பிள்ளைகளே நீங்களெள்லாரும் தேவனுடைய பிள்ளைகள் என்பது உங்களுக்கு நன்றாகத்தெரியும். நாமெல்லாரும் தேவனுடைய பார்வையில் எது சரியான பாதையோ அதில் நடக்கவேண்டும். **ஏசாயா 35:8ல்** நாம் ஒரு பெரும்பாதையான வழியைப் பார்க்கிறோம். அது பரிசுத்த வழியாக இருக்கிறது. நம் வாழ்க்கையில் நாம் பயணிக்கும் பாதை சிந்தையிலும், வார்த்தையிலும், செயலிலும் பரிசுத்தமுள்ளதாயிருக்க வேண்டும்.

இந்தப் பரிசுத்த பெரும்பாதையில்தான் நாமெல்லாரும் நடக்க வேண்டும். நாமெல்லாரும் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம். நம்முடைய பாவங்களுக்காக ஒரேதரம் பலியாக தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை ஒப்புக்கொடுத்தார் (யோவான் 3:16) எனவே, அருமையான குழந்தைகளே, நாம் சரியாக இருக்க வேண்டுமென்றால் தேவனுடைய வார்த்தைக்கு எப்போதும் கீழ்ப்படிய வேண்டும்.

அன்பான பிள்ளைகளே! நம்மெல்லாருக்கும் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்ற வேண்டுமென்கிற நோக்கம் உண்டு என்பதை உணர்ந்து கொள்ளவேண்டும். அதற்கு தேவன் நாம் கற்று, விசுவாசிக்கும்படியாக தந்திருக்கிற வார்த்தைகளைப் புரிந்து கொள்ள வேண்டும். நம் தேவன் பரிசுத்தராயிருக்கிறபடியால், உங்கள் நடக்கை எல்லாவற்றிலும் பரிசுத்தமாயிருங்கள் (II பேதுரு 1:16,17). தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!

அன்புடன்
பிரெய்சி அக்கா!

## வினாக்கள்:

ஏசாயா 35:8-10.

1. தீட்டுள்ளவன் நடக்காத அந்த பெரும்பாதையான வழி எது?
2. அந்த பரிசுத்த வழியில் நடக்கிறவர்கள் திசைகெட்டுப் போவார்களா?
3. அந்த பெரும்பாதையான வழியில் யாரெல்லாம் நடப்பார்கள்?
4. நாம் யாரைப்போல் நடக்க வேண்டும்?
5. கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் திரும்பி, சீயோனுக்கு எப்படி வருவார்கள்?

✝

---

## நாளும், நடப்பும்

1. தமிழ் நாட்டில் மீண்டும் உயர்த்தப்பட்டுள்ள பால்விலை உயர்வால் மக்கள் கடும் அவதி.
2. நம் நாட்டில் 75வது சுகந்திர தினம் வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது.
3. உக்ரைன்-ரஷ்யா இடையோன போர் மீண்டும் சூடு பிடித்திருக்கிறது.
4. தமிழ்நாட்டில் அரசு பேருந்துகளில் தானியங்கி முறையில் பயணச்சீட்டு வழங்கும் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
5. சென்னையில் நடைபெற்ற உலக செஸ் போட்டியில் இந்தியா 9 பதக்கங்கள் பெற்று சாதனை படைத்தது.

# நம் நம்பிக்கை நலிவடைந்து விட்டதா?

Bro. பென்னி மார்ட்டின்

பிரியமான திருமறை ஆசான் வாசகர்களுக்கு வானவராம் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துதல்களை தெரிவித்துக் கொள்கிறேன். யூதாவின் ராஜாவாகிய எசேக்கியா ஆரம்ப நாட்களில் தேவனுக்குப் பயந்து, தேவன் மீது அபரிதமான நம்பிக்கை கொண்டிருந்த ஒரு ராஜாவாக இருந்தான். ஆனால் அசீரிய ராஜாவாகிய சனகெரிப் யூதாவுக்கு விரோதமாகப் படையெடுத்து வந்தபோது அவன் நம்பிக்கையில் நலிந்துபோனபடியால் தேவனை அறியாத ஒரு மனிதனைக்கொண்டு இவன் உணர்ந்துகொள்ளும்படி தேவன் சில காரியங்களை அறிவித்தார் (2இராஜாக்கள் 18:19-21). ஒரு வசனத்திற்குப் பிறகு அதாவது 21ஆம் வசனத்தில் நீ அந்த எகிப்தை நம்புகிறாய் என்று சனகெரிப்பின் தளபதியால் சராமரியாக எசேக்கியா மீது குற்றச்சாட்டு வைக்கப்பட்டது. பொதுவாக, நாம் பார்க்கும்போது இந்த எகிப்து தேசம் நாகரிகம் மற்றும் கலாச்சாரத்தின் தொட்டிலாக இருந்திருக்கிறது. வேதாகமத்தில் எகிப்துக்கென்று எப்போதுமே ஒரு தனி இடம் உண்டு. யோசேப்பின் சகோதரர்கள் பஞ்சக்காலத்தில் ஆகாரத்திற்காக எகிப்துக்குத்தான் சென்றார்கள். இஸ்ரவேலர்களை வனாந்திரத்தில் வழிநடத்தின தேவதாசனாகிய மோசே எகிப்தியருடைய சகல சாஸ்திரங்களிலும் கற்பிக்கப்பட்டு வாக்கிலும், செய்கையிலும் வல்லவனானான் என்று அப்போஸ்தலர் 7:22ல் வாசிக்கிறோம். ஆனால், அதே நேரத்தில் எகிப்து தேசம் பாவத்தையும், அடிமைத்தனத்தையும் நினைவுப்படுத்துகிறது. சரி, இது ஒரு புறம் இருக்கட்டும் மறுபுறம் நம்முடைய நம்பிக்கை அதாவது தேவன் மீதான நம்முடைய நம்பிக்கை எப்படி இருக்கிறது என்று அலசி ஆராய்வோம். நம் நம்பிக்கை இந்த எசேக்கியா ராஜாவைப் போல் நலிவடைந்து நம்பிக்கையாக இருக்கிறதா அல்லது நங்கூரம் பாய்ச்சப்பட்ட நம்பிக்கையாக இருக்கிறதா?

## I ஒருவரை தேவன் மீது நம்பிக்கை இழக்கச்செய்கிற காரணிகள்

பொதுவாகவே, தேவன் மீது நம்பிக்கை வைத்து வாழ்பவர்கள் காரியங்கள் சுமூகமாக போய்க்கொண்டிருக்கும்போது தேவனோடு கொண்டிருக்கும் உறவில் எந்த விரிசலையும் ஏற்டுத்திக் கொள்வதில்லை. ஆனால், காரியங்கள் நாம் எதிர்பார்த்தபடி நடக்காத போது, எதிராக எழும்போது, புரியாத புதிராக தோன்றும்போது நம்பிக்கை இழந்துபோகிறோம், விழுந்துபோகிறோம். அந்த சந்தர்பத்தில் தேவன் மீது நாம் கொண்டிருக்கும் நம்பிக்கையில் சற்று சறுக்கல் ஏற்படுகிறது. வேதாகமத்தில் நாம் பார்க்கும்பொது,பக்தனாகிய யோபுவின் சரித்திரத்தை புரட்டி பார்த்தால் அவர் தன் வாழ்வில் மிகப்பொரிய

பொருளாதார சேதத்தை சந்தித்ததை நாம் காணமுடியும். சில நிமிடங்களில் யோபுவிடமிருந்த எல்லாமேபறிக்கப்பட்டன. அவர் எல்லாவற்றையும் இழந்துவிட்ட நிலையிலும் நம்பிக்கையை மாத்திரம் இழக்கவில்லை. பலர் தங்கள் வாழ்வில் பொருளாதார பிரச்சனை ஏற்ப்படும்போது தேவன்மீதான றம்பிக்கையை இழந்து விடுகிறார்கள், அதன் விளைவாக தங்களையே இழந்து விடுகிறார்கள். (1தீமோத்தேயு 6:10)ல் நாம் பார்கக்கும்பொது **பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராய் இருக்கிறது, சிலர் அதை இச்சித்து விசுவாசத்தை விட்டுவழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக்கொண்டிருக் கிறார்கள்** என்று சொல்லப்பட்டிருக்கிறது.

அடுத்ததாக நாம் பார்க்கும்கோது பலருடைய குடும்பங்களில் நேரிடும் சோகச்சம்பவங்கள் தேவன் மீதான ஒருவருடைய நம்பிக்கையை குன்றச்செய்துவிடுகின்றன. நாம் பார்த்துக் கொண்டிருக்கும் வேதாகம கதாபாத்திரமான யோபு தன்னுடைய சொத்துக்களையும், பத்து பிள்ளைகளையும் சில நிமிடங்களில் இழந்தார். அவர் அத்தனை இழப்புகளின் மத்தியிலும் 'கர்த்தர் கொடுத்தார் கர்த்தர் எடுத்தார், கர்த்தருடைய நாமத்திற்கு ஸ்தோத்திரம்' என்றார். பலர் இத்தகைய சூழ்நிலையை எதிர்கொண்டால் அநியாயம் செய்பவர் களெல்லாம் அதி ஐஸ்வரியமாக வாழ்கிறார்களே, நான் அப்படி என்ன பெரிய பாவம் செய்துவிட்டேன்? தேவன் ஏன் இதை எனக்கு அனுமதித்தார்? என்று புலம்ப ஆரம்பித்துவிடுவார்கள். ஆனால் இங்கு யோபுவின் நம்பிக்கையின் வார்த்தைகளை வாழ்வின் எல்லா நிலைகளிலும் நினைவுகொள்ளவேண்டும். (யோபு 13:15)

II **தேவனை நம்புகிறவர்கள் அவர் தங்கள் தேவைகளை சந்திப்பார் என்று நம்புகிறார்கள்.** (பிலிப்பியர் 4:19)

பிரியமானவர்களே, நம் வாழ்க்கையில் உண்டாகும் எல்லா நன்மை களும் தேவனிடமிருந்துதான் இறங்கி வருகிறது, சுரந்துவருகிறது. **நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்து உண்டாகி சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கி வருகிறது** (யாக்கோபு 1:17). பல சந்தர்பங்களில் நாம் இதைச் சிந்திப்பதேயில்லை. பலர் தங்களுடைய கல்வி, அறிவு போன்றவைகளால் வாழ்கையில் நன்மையான காரியங்களை பெற்றிருப்பதாக பெருமிதம் கொள் கிறார்கள். முகமும், முகவரியும்இல்லாத நம்மை இகபர நன்மைகளால் நிறைத்தது தேவன் என்பதை பல நேரங்களில் மறந்து விடுகிறோம், அல்லது நினைக்க மறந்து விடுகிறோம். பிதாவாகிய தேவன் நம் அடிப்படை தேவைகளான உணவு, உடை போன்றவைகளை முதலாவது அவருடைய ராஜ்ஜியத்தையும், நீதியையும்

தேடும் போது கொடுக்கிறார் [மத்தேயு 6:33]. இதன் பெருள் நாம் வேலைச் செய்யாமல் விருதவாக சுற்றவேண்டும் என்பதல்ல. மாறாக வேலைவாய்ப்புகளும் அதினால்வரும் நன்மைகளும் தேவன் நம்மை பராமரிப்பதின் ஓர் அங்கமாக இருக்கிறது. சிலர் தங்கள் தேவைகள் அதிகமாக இருப்பதாகவும், அதை தேவனால் சந்திக்க முடியாததென்றும் நினைத்து தேவனுடைய வல்லமைக்கு எல்லைக்குறிக்கிறார்கள். **பூமியும் அதன் நிறைவும் கர்த்தருடையது** எனும் வார்த்தைகள் நம்மை பூரணமாக பூரிக்கச் செய்ய வேண்டும்.

பல வேளைகளில் நம் வாழ்க்கையில் ஏற்படும் மலைப்போன்ற பிரச்சனைகளை எண்ணி மலைத்துப்போய், நிலைகுலைந்து போகிறோம். தேவன் நம்முடைய சரீரபிரகாரமான தேவைகளை மாத்திரமல்ல, ஆவிக்குரிய தேவைகளையும் சந்திக்கிறார். இவைகளோடு நம் தேவன் நின்றுவிடாமல், நமக்கு உணர்வுப்பூர்வமான பாதுகாப்பையும் அளிக்கிறார். அது என்ன உணர்வு பூர்வமாண பாதுகாப்பு? என்று நீங்கள் கேட்கலாம். இவ்வுலகில் எத்தனையோ பேர் தங்கள் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கப்படுவதில்லை, தங்களிடம் யாரும் அன்புகாட்டுவதில்லை என்று ஏங்குகின்றனர். அவர்கள் தேவனுடைய அன்பை ருசிப்பார்க்கும்போது தேவனை உறுதியாக பற்றிக்கொள்கின்றனர். அவர்கள் தேவனுடைய உண்மையான அன்புக்கும், இவ்வுலகின் போலியான அன்புக்கும் இடையே உள்ள வேறுபாட்டை கண்டறிந்து இவ்வுலகின் மாயையான அன்பு வேண்டாம்; தேவனுடைய உயரிய உன்னதமான தன்னலமற்ற அன்பே தங்களுக்கு போதுமானது என்று திருப்தியடைகின்றனர். நாசியில் சுவாசம் உள்ள மனிதனை நம்பி ஏமாற்றமடைகிறோம், மாற்றத்திற்காக ஏங்குகிறோம்.ஜீவனுள்ள தேவனை நாம் முழுமையாக நம்பி வாழ்க்கையில் எல்லாவற்றையும் செய்யும்போது நம் நம்பிக்கை ஒருபோதும் வீண்போகாது.

## III **தேவனை நம்புகிறவர்கள் போதுமென்ற மனதுடனே இருப்பார்கள்.**

கிறிஸ்தவர்களில் பெரும்பாலானோர் எத்தனையோ தேவனுடைய ஆசிர்வாதங்களை ருசிபார்ததபோதிலும் கூட திருப்தி இல்லாமல் இன்னும் வேண்டும், இன்னும்வேண்டுமென்று தேவனிடம் தவறாமல் முறையிடுவதை நாம் காண்கிறோம். வேத வாக்கியங்களில் நாம் காணும்போது போதுமென்கிற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம் என்று காண்கிறோம். [I தீமோத்தேயு 6:6]. இதன் பொருள் நாம் வாழ்க்கையில் மேம்பட அதிகமாக உழைக்க்கூடாது, அதிகமாக எதையும் செய்யக்கூடாது, அதே நிலையிலேயே இருக்க வேண்டும்

என்பதல்ல. நாம் பேராசையுடையவர்களாக இல்லாமல் தேவன் நமக்கு தந்திருப்பவைகளில் திருப்திப்பட வேண்டும் என்பதாயிருக்கிறது. பிலிப்பியர் 4:11ல் நான் எந்த நிலையிலிருந்தாலும் மனரம்மியமாக இருக்க கற்றுக்கொண்டேன் என்று பவுல் சொல்கிறார். எனவே, திருப்தி அடைவதென்பது மனிதனிடத்தில் இயற்கையாகவே அமைந்த ஒரு தன்மையல்ல, அது கற்றுகொள்கிற ஒன்றாகத்தான் இருக்கிறது.

**நீங்கள் பண ஆசை இல்லாதவர்களாய் நடந்து உங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்று எண்ணுங்கள்** என்று எபிரெயர் 13:5ல் வாசிக்கிறோம். நாம் பணப்பசி நிறைந்த உலகில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். மனிதர்களுடைய தேவைகள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டேயிருக்கிறது. இந்த நுகர்வு கலாச்சாரத்தில் முகர்ந்து பார்ப்பதையெல்லாம் வாங்கும் வாடிக்கையாளராகிவிட்டோம். வீட்டில் விலையுயர்ந்த பொருட்கள் வைத்திருந்தால் அவன் புத்திசாலி எனும் போலி வலையில் சிக்கிக்கொண்டோம். இவ்வுலகில் நமக்கான தேவைகளுக்கான செலவு செய்வதற்கு குறைந்தளவு பணமே போதுமானது. ஆனால், நாம் அதில் திருப்திப்படாமல் மற்றவர்களுக்காக வாழ ஆசைப்பட்டு வீணான காரியங்களில் சிக்கிக்கொள்கிறோம்.

பிரியமானவர்களே, நம் வாழக்கையின் பல சந்தர்பங்களில் தேவனை நம்பி எத்தனையோ நன்மைகளை பலருக்கு செய்திருக்கிறோம். ஆனால், நமக்கு எந்த நன்மையும் உண்டாகவில்லையே என்று வலியும், சலிப்பும் ஏற்படுகிறது. ஆனால் நாம் சோர்ந்துபோகாமல் தொடர்ந்து நன்மை செய்வோம், தேவன் அதற்கான பலனை நமக்கு ஏற்றகாலத்தில் தருவார். **உங்கள் கிரியையையும், நீங்கள் பரிசுத்தவான்களுக்கு ஊழியஞ்செய்ததினாலும் செய்து வருகிறதினாலும் தமது நாமத்திற்காக காண்பித்த அன்புள்ள பிரயாசத்தையும் மறந்துவிடுகிறதற்கு தேவன் அநீதியுள்ளவரலல்லவே** (எபிரெயர் 6:10). அருமையானவர்களே, இவ்வுலகில் எல்லோருக்கும் பிரியமாய் வாழ்வதென்பது கூடாத காரியம். தேவனுக்கு பிரியமாக வாழ்வதை நம் தலையாய கடமையாக கொண்டிருந்தால், அவர் நமக்கு தந்திருப்பவைகளில் திருப்தியடைவோம். அதற்காக நன்றியுள்ளவர்களாய் இருப்போம். நம் தேவன் நம்மை பராமரிப்பார் என்ற நம்பிக்கையுடையவர்களாயிருந்தால் போதுமென்கிற மனதுடனே இருப்போம். ஒருபோதும் நாம் நம்பிக்கையில் நலிவடையாமல் நாட்களை நகர்த்துவோம், தேவன் தாமே நம்மை ஆசீர்வதிப்பாராக! ஆமென். ✝

# நற்செய்தியும், துர்ச்செய்தியும்

Bro. பாண்டியன்

**நா**ம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் ஏதாகிலும் செய்திகள் நம் காதுகளில் வந்து சேர்ந்து கொண்டேதான் இருக்கிறது. அவைகளில் பெரும்பாலும், அரசியல், பொழுது போக்கு, ஆரோக்கியம் பற்றி அல்லது மற்றவர்களைப் பற்றிய வம்பு மற்றும் அவதூறுகள் போன்றவையே அதிகம். நல்ல செய்திகளைக் கேட்கும்பொழுது மனம் மகிழ்ச்சி யடைவதும், கெட்ட செய்திகளைக் கேட்கும்பொழுது கவலை அல்லது அதிர்ச்சியும் அடைகிறோம். எகிப்தில் அடிமைகளாய் இருந்த இஸ்ரவேலரை அற்புதவிதமாக விடுதலையாக்கிய தேவன் அவர்களை தாம் வாக்கு பண்ணின கானான் தேசத்தில் சேரப் பண்ண பல சிரமங்கள் மத்தியில் வழி நடத்தினார். ஜனங்கள் பெறப்போகும் ஆசீர்வாதமான அந்த தேசத்தைப் பற்றி அறிந்து கொள்ள வேவுகாரரை அனுப்ப மேசே யிடம் தேவன் சொன்னார். அதைப்பற்றிக் கேள்விப்பட்டு ஜனங்கள் மகிழ்ச்சியும், ஆறுதலும் அடைவார்கள் என்று தேவன் நினைத்திருப்பார்.

ஆனால், கோத்திரத்திற்கு ஒருவராக சென்ற பன்னிரண்டு பேரில் இரண்டு பேர் மாத்திரம் நற்செய்தியையும், மீதி மெஜாரிட்டி பத்துபேர் அத்தேசத்தைப் பற்றி துர்ச் செய்தியையும் பரப்பினார்கள். இதைக் கேள்விப்பட்ட ஜனங்கள் நடந்து கொண்ட விதம் நமக்கு ஒரு பாடம் என்று பவுல் கூறுவதைக் கவனியுங்கள். 1கொரி 10:11. அதைக்குறித்துச் சற்று நாம் தியானிப்போம். பல நேரங்களில் நாம் தேவன் சொன்னதை மறந்து வேறு காரியங்களில் நம் கவனத்தைச் செலுத்தும்போது பல கவலைகள், குழப்பங்களுக்கு ஆளாகிறோம்.

கலகத்திற்கல்ல தேவன் சமாதானத்திற்குத்தான் காரணமாக இருக்கிறார் (1கொரி14:33) உண்மையில், இவர்கள் சுற்றிப்பார்த்த தேசம் தேவன் சொன்னபடி செழிப்பான தேசமாகத்தான் இருந்தது. அதற்கு அடையாளமாக ஒரே குலையுள்ள ஒரு திராட்சக் கொடியை அறுத்து அதை ஒரு தடியிலே இரண்டு பேர் கட்டித்தூக்கிக் கொண்டு வந்தார்கள் என்று பார்க்கிறோம். அதை தட்டிக் கேட்பதற்கு கூட அங்கு ஆட்கள் இல்லை. காரணம் அவ்வளவு செழிப்பு கூடவே மாதுளம்பழங்களும் இருந்தது. அதனால்தான் உலகத்தில் கேட்கமுடியாத ஒரு வர்ணனை யாக அது பாலும், தேனும் ஓடுகிற தேசம் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

செழிப்பை கவனித்து தேவன் சொன்ன பிரகாரமாகவே இருக்கிறது என்று சந்தோஷப்பட வேண்டியவர்கள் அங்கிருக்கிற ஜனங்களின் ராட்சத உருவத்தைப் பார்த்து பயந்து துர்செய்தி பரப்பினார்கள் (எண் 13:30–33).

ஆகாத சம்பாஷணை நல்லொழுக்கங்களைக் கெடுக்கும் என்பதற்கு இணங்க துர்ச்செய்திகளைக் கேட்ட ஜனங்கள் விசுவாசத்தைக் கைவிட்டு இராமுழுவதும் அழுது கொண்டிருந்தார்கள் என வாசிக்கின்றோம். மேலும், எதிரிகளிடம் மடிவதை விட இந்த வனாந்திரத்திலே செத்தால் நலம் எனப் புலம்பினார்கள். இதைக்கண்ட தேவன் கோபம் மூண்டு, நான் கட்டின சகல அடையாளங்களையும் அவர்கள் கண்டும் எதுவரைக்கும் என்னை விசுவாசியாமல் இருப்பார்கள்? என்று தெரிந்து கொண்டார். எல்லா சூழ்நிலைகளிலும் தேவன் நம்மிடம் விசுவாசத்தைத்தான் எதிர்பார்க்கிறார் என்பதை கவனியுங்கள். (எண் 14:11)

நம் கர்த்தருக்குப் பயந்து நடக்கும்போது துற்செய்திகளைக் கேட்கிறதினால் பயப்படமாட்டோம். ஏனெனில், நம் இருதயம் அவரையே நம்பித் திடனாயிருக்கும் என்கிறான். சங்கீதக்காரன் (சங் 112:7) முகத்தின் கலவரத்தை ஒருவேளை மனிதன் சுலபமாகக் கண்டு கொள்ளலாம். ஆனால், இருதயத்தின் கலக்கம் தேவனுடைய பார்வையில் தப்பாது. சபையில் இருப்பவர்களை விசுவாசிகள் என்கிறது வேதம். அன்றன்றுள்ள தேவைகளுக்குக் கவலைப்படுகிறவர்களையும் ஆண்டவர் தங்களோடு இருந்தும், காற்றையும் கடலையும் பார்த்து பயந்த சீஷரையும் பார்த்து, **அற்ப விசுவாசிகளே** என்று கடிந்து கொண்டார் இயேசு. நம்முடைய வாழ்விலும் நாம் சந்திக்கும் இக்கட்டுகளில் நாம் சோர்ந்து போகாமல் நமக்கு உதவுகிற மற்றும் பெலப்படுத்துகிற ஆண்டவர் நம்மோடிருக்கிறர் என்கிற தைரியம் உள்ளவர்களாய் மாற வேண்டும். உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக தேவனிடத்திலும், என்னிடத்திலும் விசுவாசமாய் இருங்கள் என்று சொல்லி இருக்கிறார் அல்லவா?

இராமுழுவதும் இஸ்ரவேல் ஜனங்கள் அழுதும் தேவன் ஏன் இரக்கப்படவில்லையென சிலர் நினைக்கலாம். ஆனால், அதற்குக் காரணமுண்டு. இஸ்ரவேல் ஜனங்களிடம் ஏற்கனவே சொன்ன வார்த்தைகளை கவனிப்போம். லேவி 26:7-9 ல் தேவன் அவர்களிடம் நீங்கள் உங்கள் சத்துருக்களை துரத்துவீர்கள், உங்களைப் பலுகிப் பெருகப் பண்ணுவேன் என்று சொன்னதுமின்றி இதை நீங்கள் நம்பாமல் என் வார்த்தைகளை மீறினால் உங்கள் கண்கள் பூத்துப்போகப் பண்ணவும், இருதயத்தைத் துயரப்படுத்தவும் திகிலையும், ஈளையையும் காய்ச்சலையும் உங்களுக்கு வரப்பண்ணுவேன் என்று ஏற்கனவே எச்சரித்திருந்தார். (லேவி 26:16) இதனால்தான் அந்த ஜனங்கள் அவ்வளவு அழுதும் தேவன் செவி கொடுக்கவில்லை. நம்மில் பலர் பிள்ளைகள் அழுகிறார்கள் என்பதற்காக எப்படியெல்லாம் வளைந்து கொடுக்கிறார்கள் என்பதை சிந்திக்க வேண்டும்.

இப்பொழுதும் சில ஜனங்கள் தங்கள் பாவ வழிகளை சீராக்காமல் தேவனிடம் அழுது காரியங்களை சாதிக்க முயலுகிறார்கள். ஆனால் பாவிகளுக்கு தேவன் செவி கொடுப்பதில்லை என்று வேதம் தெளிவாக எடுத்துரைக்கிறது. சரி, நமக்கு வரும் இக்கட்டுகளில் நாம் எப்படி நடந்து கொள்ள வேண்டும்? தாவீதின் உறவுகளும், உடைமைகளும் எதிரிகளால் சூறையாடப்பட்டபோது அவன் மிகவும் நெருக்கப்பட்டான். ஆனால், தன் தேவனாகிய கர்த்தருக்குள் தன்னைத் திடப்படுத்திக் கொண்டான் (1சாமு 30:6) என்பதை நிதானியுங்கள். பிற்பாடு தேவக்கிருபையால் அவன் எல்லாவற்றையும் மீட்டுக் கொண்டான் என்பதை நாம் அறிவோம். இப்படிப்பட்ட அனுபவங்களுடைய தாவீது பாடியதைக் கவனியுங்கள். நான் கர்த்தரைத் தேடினேன். அவர் எனக்குச் செவி கொடுத்து என்னுடைய எல்லாப் பயத்துக்கும் என்னை நீங்க லாக்கி விட்டார். நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அநேகமாயிருக்கும், கர்த்தர் அவைகள் எல்லாவற்றிலும் நின்று அவனை விடுவிப்பார் (சங் 34:4,19)

அவர்களைக் குறித்து சங்கீதக்காரன் குறிப்பிடும்போது அவருடைய வார்த்தையை விசுவாசியாமல் இச்சிக்கப்படத்தக்க தேசத்தை அசட்டை பண்ணினார்கள். கர்த்தருடைய சத்தத்திற்கு செவிகொடாமல் தங்கள் கூடாரங்களில் முறுமுறுத்தார்கள். அப்பொழுது அவர்கள் வனாந் தரத்திலே மடியவும், அவர்கள் தங்களுக்கு விரோதமாகத் தம்முடைய கையை எடுத்தார் (சங்.106:24-27) என்கிறான்.

இதைத்தான் எபிரெய ஆசிரியர் தன் நிருபத்தில் அவர்கள் கீழ்ப்படியாமைக்கு நீதியான தண்டனை கிடைத்து அவர்களுடைய வசனம் (பழைய ஏற்பாட்டு நியாயப் பிரமாணம்) உறுதிபடுத்தப்பட்டிருக்க தேவன் தாமே சாட்சி கொடுத்திருக்கிற இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக் குறித்து (புதிய ஏற்பாட்டு கிறிஸ்துவின் பிரமாணம்) நாம் கவலையற்று இருப்போமானால் தண்டனைக்கு எப்படி தப்பித்துக் கொள்வோம்? (எபி 2:2-4) என்று கேட்கிறார். எனக்கன்பானவர்களே! உண்மையான நற்செய்தியாகிய சுவிசேஷம் நமக்கு அறிவிக்கப் பட்டுள்ளது. நாம் இரட்சிக்கப்பட்டு சபையில் இருக்கிறோம் - நம் சபை வாழ்வு இஸ்ரவேலரின் வனாந்திர வாழ்வுக்கு ஒப்பாக இருக்கிறது.

அதனால்தான் பவுல் அவர்களோடே நம்மை ஒப்பிட்டு அவர்களைப் போல் நீங்களும் முறுமுறுக்காதிருங்கள் என்கிறார் (1கொரி 10:10) ஆகவே, நாம் இன்னும் தேவனுடைய வார்த்தைகளுக்கு அதிகமாக செவிகொடுத்து, விசுவாசித்து கிறிஸ்துவைப் பற்றிய நற்செய்தியை மற்றவரோடு பகிர்ந்து கொள்வோம். தேவக்கிருபை நம் அனைவரோடுங் கூட இருப்பதாக. ஆமென்! ✝

## கிறிஸ்து என்னும் மார்க்கம் – பாடங்கள்
## உலகின் முதல் குடும்பம்

சகோ. ஜே. ஆபகூக் ஜேம்ஸ்ராஜகுமார்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

**3. மனிதர்களின் இருதயக்கடினத்தின் நிமித்தம் பலதார முறைகள் உலகத்தில் வந்தது, நியாயமான காரணம் இல்லாமல் மனைவியைத் தள்ளி விடக்கூடாது, மத். 19 : 7 – 9.**

அ. அப்படி நியாயமான காரணத்தோடு தள்ளிவிட்டாலும் அவளை விவாகம் பண்ணுகிறவனும் விபச்சாரம் செய்து, பாவம் செய்கிறவனாய் இருப்பான் என்கிறார் இயேசு.

1. வேசித்தன முகாந்தரத்தினாலொழிய தன் மனைவியத் தள்ளிவிடுகிறவன், அவளை விபச்சாரஞ் செய்யப்பண்ணுகிறவனாயிருப்பான்; அப்படித் தள்ளிவிடப்பட்டவளை விவாகம் பண்ணுகிறவனும் விபச்சாரஞ் செய்கிறவனாயிருப்பான்,(மத். 5 :32).

1. அப்பொழுது ஆதாம்: இவள் என் எலும்பின் எலும்பும், என் மாம்சத்தின் மாம்சமுமாய் இருக்கிறாள்; இவள் மனுஷனில் எடுக்கப்பட்டபடியினால் மனுஷி என்னப்படுவாள் என்றான், (அதி. 2 : 23).

2. பின் நாளில், ஆதாம் தன் துணையாகிய மனுஷிக்கு ஏவாள் என்று பேரிட்டான். ஆதாம் தன் மனைவிக்கு ஏவாள் என்று பேரிட்டான்; ஏனெனில், அவள் ஜீவனுள்ளோருக்கெல்லாம் தாயானவள், (ஆதி. 3 : 20).

இ. கணவன் மனைவி உறவு பற்றி வேதம் தெளிவாகக் கூறுகிறது. இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள், (ஆதி. 2 : 24 ; மத். 19 :5).

1. ஆதாமின் சரீரத்திலிருந்த ஒரு விலா எலும்பிலிருந்து ஏவாள் உண்டாக்கப்பட்டபடியால் ஆதாம் ஏவாள் ஆகிய கணவன் மனைவி இருவரும் ஒரே சரீரமாயிருக்கிறார்கள் என்பது மாற்றமுடியாத உண்மையாயிற்று, ஆதி. 2 : 21 – 22.

2. ஆதாமைப்போலவே தேவன் ஏவாளையும் தனியாக மண்ணையெடுத்து உண்டாக்கியிருந்தால், கணவன் தலையாகவும், மனைவி சரீரமாகவும் என்கிற உதாரணம் விலகி கணவனும் தலை, மனைவியும் தலை என்கிற கோட்பாடு வந்திருக்கும்.குடும்பங்கள் இரண்டு தலைமைகள் இருந்தால் அவை ஒன்றுபடாமல் சிதைந்துபோம்.

3. ஒவ்வொரு புருஷனுக்கும் கிறிஸ்து தலையாயிருக்கிறாரென்றும் ஸ்திரீக்குப் புருஷன் தலையாயிருக்கிறானென்றும் ... நீங்கள் அறியவேண்டுமென்று விரும்புகிறேன், (1கொரி. 11 : 3).

ஈ.திருமணம் யாவருக்குள்ளும் மதிப்பிற்குரியதாயிருக்கிறது. விவாகம் யாவருக்குள்ளும் கனமுள்ளதாயும் இருக்கிறது, எபி. 13 : 4

1. அனைத்து திருமணங்களும் அதாவது திருமணத்திற்கு தகுதியுள்ள ஒரு ஆணும், ஒரு பெண்ணும் கலியாண பந்தத்தில் இணைவது மதிப்பிற்குரியது.

2. அவர்கள் தேவனை அறியவில்லையானால் ஆவிக்குரிய நன்மைகளைப் பெறடியாது. ஆனால், அவர்கள் பூமியில் ஒழுக்கமான நேர்மையான அன்பான திருமண வாழ்க்கை வாழ்ந்தால் அதற்குரிய நன்மையை நிச்சயம் பெறுவார்கள்.

3. விவாகமஞ்சம் அசுசிப்படாததாயுமிருப்பதாக, (எபி. 13 : 4). என்பது திருமண பந்தத்தில் இணைகிற கணவன், மனைவி ஆகியோரின் உறவுக்குள் மூன்றாவது நபருக்கு உரிமை இல்லை என்பது ஆகும். இந்த இருவர் மட்டுமே ஒரே மாம்சமாயிருக்கிறார்கள்.

4. சில வீடுகளில் கணவனின் பெற்றோர் அல்லது உடன் பிறந்தவர்கள், உறவினர்கள் அதேபோல மனைவியின் சொந்தங்கள் கணவன் மனைவி வாழ்க்கையிலே தலையிட்டு, பிரச்சனைகளையும் பிரிவினைகளையும் உண்டாக்குவார்கள். ஆனால், தேவன் அதை ஏற்றுக்கொள்ளுகிறதில்லை.

5. இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும், தன் தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான் ... என்கிறார், ஆதி. 2 : 24.

உ. கணவனின் சரீரம் மனைவிக்குச் சொந்தமானது; அதேபோல மனைவியின் சரீரம் கணவனுக்குச் சொந்தமானது என்று வேதம் கூறுகிறது. ஆகையால், அடுத்தவர் பொருளான சரீரத்தை முதலாளிக்கு அதாவது கணவன் மனைவிக்கும், மனைவி கணவனுக்கும் விரோதமாகப் பயன்படுத்தக்கூடாது.

1. மனைவியானவள் தன் சுயசரீரத்திற்கு அதிகாரியல்ல, புருஷனே அதற்கு அதிகாரி; அப்படியே புருஷனும் தன் சுயசரீரத்திற்கு அதிகாரியல்ல, மனைவியே அதற்கு அதிகாரி, (1கொரி.7 : 4).

2. அதேபோல நம் சரீரத்திற்கு இன்னொரு முதலாளியும் இருக்கிறார், அவர் கர்த்தர்.

3. உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிற தென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா? கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே; ஆகையால், தேவனுக்கு உடைய வைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள், (1கொரி. 6 : 19 – 20).

**அ. ஆனால் தேவன் மனிதனைப் படைத்தபோதே அவர்களைப் பலுகிப்பெருகி, பூமியை நிரப்புங்கள் என்று ஆசீர்வதித்தார். ஆகவே பிள்ளைகள் பாவத்தில் பிறக்கிறார்கள் என்றும் ஆதாமின் பாவம் அவன் பிள்ளைகளுக்கு உண்டு என்கிற ஜென்ம பாவ உபதேசம் பொய்யானது.**

1. பின்பு தேவன் அவர்களை நோக்கி: நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி ... ஆண்டுகொள்ளுங்கள் என்று சொல்லி, தேவன் அவர்களை ஆசீர்வதித்தார், ஆதி. 1 : 28.

**ஆ. ஆதாம் ஏவாளிடத்தில் தேவன் சிலகாரியங்களை எதிர்பார்த்தார்; அவர்களிடத்தில் மட்டுமல்ல இன்றைக்கும் வாழும் ஒவ்வொரு கணவன் மனைவியினிடத்திலும் எதிர்ப்பார்க்கிறார்.**

1. அதென்னவென்றால் அவர்கள் கிறிஸ்துவை பிரதிபலிக்கும் தெய்வீகஅன்பான குடும்பமாக இருக்கவேண்டும்.

2. ... சபையானது கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறதுபோல மனைவிகளும் தங்கள் சொந்தப் புருஷர்களுக்கு எந்தக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்க வேண்டும்

**இ. அவர்கள் தங்கள் பிள்ளைகளை தேவபக்தியுள்ள சந்ததியாக வளர்க்க வேண்டும். அவர் ஒருவனையல்லவா படைத்தார்? ஆவி அவரிடத்தில் பரிபூரணமாயிருந்ததே, பின்னை ஏன் ஒருவனைப் படைத்தார்? தேவபக்தியுள்ள சந்ததியைப் பெறும்படிதானே ..., மல். 2:15.**

**ஈ. இந்த உலகத்தின் முதல் குடும்பத்தில் பிறந்த 3 பிள்ளைகள், காயீன், ஆபேல் மற்றும் சேத் ஆகியோர் பெயர்கள் மட்டும் வேதத்தில் பதிவு செய்யப்பட்டது.**

1. சேத்து பிறந்த பிறகு ஆதாம் எண்ணூறு வருஷம் உயிரோடு இருந்து, குமாரர்களையும் குமாரத்திகளையும் பெற்றான். இதுதான் உலகின் முதல் குடும்பம்.

2.ஏவாளைத் தவிர ஆதாம் வேறு பெண்ணைத் திருமணம் செய்ததாக வேதத்தில் எங்கும் பதிவு இல்லை, (ஆதி. 4 : 1 – 2, 25 ; 5 : 4).

3. ஆதாமின் காலத்தில் வேறு மனிதர்களும் இருந்தார்கள் என்பதும் அவர்களில் இருந்து காயீன் பெண்கொண்டார் என்பதும் ஆதாரமற்ற செய்தி. எழுதப்பட்டதற்கு மிஞ்சி நாம் எண்ணக் கூடாது (1கொரி. 4 : 6). காயீன் தன் தங்கையைத் திருமணம் செய்யக்கூடாது என்கிற சட்டம் அப்பொழுது இல்லை.

4. மேலும் மறைவானவைகள் கர்த்தருக்குரியவைகள் ஆகும், (உபா. 29 : 29).

**முடிவுரை :–**

1. கர்த்தருக்கு பயந்து அவர் வழிகளில் நடந்தால் அந்தக் குடும்பத்தை தேவன் ஆசீர்வதிக்கிறார். கர்த்தருக்குப் பயந்து, அவர் வழிகளில் நடக்கிறவன் எவனோ, அவன் பாக்கியவான்.

2. உன் கைகளின் பிரயாசத்தை நீ சாப்பிடுவாய்; உனக்குப் பாக்கியமும் நன்மையும் உண்டாயிருக்கும்.

3. உன் மனைவி உன் வீட்டோரங்களில் கனிதரும் திராட்சக் கொடியைப்போல் இருப்பாள்; உன் பிள்ளைகள் உன் பந்தியைச் சுற்றிலும் ஒலிவமரக் கன்றுகளைப்போல் இருப்பார்கள்.

4. இதோ, கர்த்தருக்குப் பயப்படுகிற மனுஷன் இவ்விதமாய் ஆசீர்வதிக்கப்படுவான்.

5. கர்த்தர் சீயோனிலிருந்து உன்னை ஆசீர்வதிப்பார்; நீ ஜீவனுள்ள நாளெல்லாம் எருசலேமின் வாழ்வைக் காண்பாய்.


6. நீ உன் பிள்ளைகளின் பிள்ளைகளையும், இஸ்ரவேலுக்கு உண்டாகும் சமாதானத்தையும் காண்பாய், சங்.128 : 1 – 6.


7. தேவன் எதிர்பார்க்கிற அவருக்குப் பிரியமான குடும்பமாக அவருடைய நோக்கத்தை நிறைவேற்றுகிறவர்களாக வாழ்ந்து, அவரது நாமத்தை மகிமைப்படுத்துவோமாக. தேவனுக்கும், கிறிஸ்துவுக்கும் நற்பெயரைக் கொண்டுவருவோமாக, ஆமென். ✝


*கனி கொடாவிட்டால் (சுபாவம் மாறாவிட்டால்)*


1. வெட்டப்படுவார்கள் – மத் 3:8–10
2. கனி கொடாதவன் கள்ளத்தீர்க்கதரிசி – மத் 7:15–20
3. தேவன் அவர்களை விட்டு கடந்து போவார் – மத் 21:43
4. தேவன் பாதுகாப்பை நீக்கி போடுவார் – ஏசா 5:1–7
5. நரகத்திற்கு அனுப்புவார் – லூக் 3:9


## 12 வித்தியாசமான தலைப்புகளில் கைப்பிரதிகள் கிடைக்கும். தேவைக்கு எங்களைத் தொடர்பு கொள்ளவும்.













# World Evangelism Gospel Media

Rajanayagam & Benny Martin On Tamilan TV
Every Saturday 7:00 - 7:30 am

Rajanayagam & Benny Martin On Nambikkai TV
Every Friday 7:30 - 8.00 am

Arjunan on Nambikkai TV
TV : On Monday & Saturday 7.30 - 7.45 pm


Hindi TV Program : Sunny, Francis & Vinay David Speaking
Sunday & Tuesday ( 7:00 - 7:30 ) pm on
Shubhasandesh Hindi Channel

P.K. Varghese In Malayalam :
Every Saturday 6:00 - 6:30 am on Jai Hind Channel TV

Philemon & Kingsley on Tamilan TV and Nambikai TV :
Every Sunday 6:45 - 7:00 am
Every Friday 6.00 - 6.30 am
Joy TV - Saturdays 9.00 pm Salvation TV - Every Sunday 2.00 pm

Joshua & Ricky Gootam In Telugu:
Every Saturday at 6:00 pm Subhavartha Channel
Every Wednesday at 6:30 pm on Rakshana Channel
Every Thursday at 11:00 am on Rakshana Channel
Satyavani T.V. online : www.sakthitv.in
Every Wednesday & Friday at 8.00 pm

For English Voice of Truth
Contact - Brothers Philemon or Kingsley
@ Po box 15 , 45/c1 Church Lane, Coronation Street,
Arasaradi, Madurai - 625016
9244204420 / 21, 0452 - 2607026





"Registered" with RNI No: TNTAM/2006/20446
Postal regn. No. Erode/26/2021 - 2023
**Licensed to Post without pre payment**
**No: TN / WR / ERD / 03 / WPP / 2021 - 2023**
Published on 17/18 th of Every Month
Posted at Erode HPO on 20/21 of Every Month.


# எங்களது இதர வெளியீடுகள்

**சத்தியத்தின் குரல்**
என்ற நூல் வேண்டுவோர்
எங்களைத் தொடர்பு கொள்ளவும்.
– ஆசிரியர்






















**தபால் செலவிற்கு**
**பணம் அனுப்பி**
**இந்நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.**

## வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

- Advanced Bible Correspondence Course -

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புவர்களுக்கு
இது ஓர் அரிய வாய்ப்பு.
ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு 7 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.
விருப்பமுள்ளவர்கள்
மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

இயக்குனர்

## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

த.பெ.எண் 27, காங்கேயம் 638–701.
தமிழ்நாடு , இந்தியா.

To:

## திருமறை தியானம்

**நம்பிக்கை** தொலைக்காட்சியில்

| | |
|---|---|
| செவ்வாய் | காலை 6:30 – 7:00 மணி |
| வெள்ளி | காலை 6:30 – 7:00 மணி |

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.